Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 07 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 25 (24.08.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 324

உங்களுக்குத் தேவையான நவீன விதமான சன் கிளாஸ், டே அன் நயிட் கிளாஸ், பிளாஸ்டிக் லென்ஸ் போன்ற சகலவிதமான கண்ணாடிகள் 1 மணித்தியாலத்தில் குறைந்த விலையில் செய்துதரப்படும். இலவச கண் பரிசோதனை. பாடசாலை மாணவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

ஒளிச்சுடர் மூக்குக் கண்ணாடியகம்

44A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். (சி-1239)

## புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாமை

# உடனடியாக அகற்றுமாறு சந்திரிகா பாதுகாப்பு அமைச்சருக்கு பணிப்பு!

## படை வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

திருகோணமலை குரங்குப்பாஞ்சானில் உள்ள புலிகளின் முகாமை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் முப்படைத் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முரணான வகையில், இந்த முகாம் அமைக்கப்பட்டிருப்பதாகவும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் இந்த முகாமை அகற்ற வேண்டும் எனக்கூறியிருப்பதாகவும் தமது உத்தரவில் ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டுக் காட்டியிருப்பதாக படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



(10ம் பக்கம் பார்க்க)

## சட்ட நிபுணர்களின் மாநாட்டில் சொல்ஹெய்ம் பங்கேற்கமாட்டார்

பாரிஸில் விடுதலைப் புலிகளின் சட்ட நிபுணர்கள் ஆராய்ந்துவரும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு தயாரிக்கும் மாநாட்டில் நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கலந்துகொள்ள மாட்டார்.

இவ்வாறு நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தோமஸ் பிராக்லண்ட் தெரிவித்தார்.பாரிஸில் தங்கியுள்ள நோர்வே சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் மாநாட்டில் கலந்துகொள்வாரா என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் திட்ட வரைபை அரசு விரிவாக ஆராயும்!

### நோர்வே தூதரக அதிகாரி பிராங்லான்ட்


விடுதலைப் புலிகளினால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான, திட்ட வரைபு குறித்து, அரசு உடன் முடிவுகள் எதுவும் எடுக்கமாட்டாது எனவும், அதைப்பற்றி விரிவாக ஆராய்ந்த பின்பே இறுதி முடிவை எடுக்கும் எனவும் நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தோமஸ் பிராங்லாண்ட் தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளராகப் பணியாற்றுவதால், ஊடகங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளேன்.

ஏன் மத்தியஸ்தராக நோர்வே வர வேண்டும் என்று கேள்வி பலரிடம் உள்ளது. எம்மை மத்தியஸ்தராக அழைத்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காதான். இரு தரப்பும் எம்மை விரும்புவதால் தான் செயற்பாடு சுலபமாகியுள்ளது. நோர்வே சிறிய நாடு, (10ம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



தானும் இருக்கிறதை அம்மா அடிக்கடி ஞாபகப்படுத்துறாவோ?

## திலக் மாரப்பன நேற்று திருமலைக்கு விஜயம்

(திருமலை)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியும் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தனர்.

திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் இடம்பெற்ற, பயிற்சியை முடித்து வெளியேறும் கடற்படையினரின் அணிவகுப்பில் கலந்து கொள்வதற்காகவே இவர்கள் திருமலைக்குச் சென்றிருந்தனர்.

இந்த விஜயத்தின்போது திருகோணமலையில் படையினரின் செயற்பாடுகள் குறித்தும், அங்குள்ள பாதுகாப்பு நிலைமை குறித்தும் கடற்படை அதிகாரிகளுடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆராய்ந்தார்.

## காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைக்கு புலிகள் ஒத்துழைப்பு!

(மட்டக்களப்பு)

இரு முஸ்ஸிம் இளைஞர்கள் காணாமறபோனது தொடர்பான விசாரணைகளுக்குப் புலிகள் பூரண ஒத்துழைப்புத் தருகின்றார்கள்.

இவ்வாறு - கல்முனைப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.யு.ஏ.சரீஸ்டின் தெரிவித்தார்.

வாழைச்சேனைக்கும், ஏறாவூருக்கும் இடைப்பட்ட பகுதிக்கு பொலிஸ் குழு ஒன்று சென்றுள்ளது. இன்னும் சில தினங்களில் அவர்களின் விசாரணை முடிவுகள் வந்துவிடும் எனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை - கல்முனைப் பிரதேசத்தில் நேற்றைய தினம் ஊரடங்கு தளர்த்தப்பட்டதால், நகரம் வழமை நிலைக்குத் திரும்பியுள்ளது.



பாரீஸ் சட்ட நிபுணர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரமுகர்கள்

## மக்கள் நலன்களையும் அபிலாசைகளையும் உள்ளடங்கியதான வரைபை உருவாக்குவோம்!

### அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களுடைய போராட்ட முயற்சிகளுக்கு, பலனைத் தேடிக்கொள்ளும் நோக்கமாக - ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு ஆலோசனை வரைபை உருவாக்குவதற்கு ஒன்று கூடி இருக்கின்றோம்.

ஏற்கனவே அரசு ஒரு இடைக்கால நிர்வாக வரைபை சமர்ப்பித்திருந்தது. நாங்கள் அவர்கள் தந்த வரைபைப் பரிசீலித்து - மக்களுடைய நலன்கள், அபிலாஷைகள் உள்ளடக்கிய ஒரு வரைபை உருவாக்கி கையளிப்பதற்கு எமது தலைமை முடிவெடுத்திருக்கிறது.

பாரிஸில் நேற்று முன்தினம் தொடங்கிய இடைக்கால நிர்வாக புதிய வரை பிற்கான ஆலோசனைக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலின் போது (10ம் பக்கம் பார்க்க)

## திருகோணமலையில் நாளை ஹர்த்தாலுக்கு அழைப்பு!

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையே இடம்பெற்று வரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்படும் சதிமுயற்சிகளை எதிர்த்தும், ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தும நாளை திருகோணமலையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மேற்படி ஹர்த்தாலுக்கான அழைப்பினை திருகோணமலை வாழ் பொங்கு தமிழ் சமூகம் விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகள்தான் ஏகப் பிரதிநிதிகள். (10ம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.

எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

(சி -1139)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தினவெளியீடு
விஜயகாந், கிரண் நடித்த

**தென்னவன்**



காட்சிநேரம்
10.30, 2.30, 6.30, 9.30

(சி-1284)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ஸ்ரீகாந், த்ரிஷா நடித்த

**மனசெல்லாம்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்

**JUDGE AND JURY**

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1285)


## கலந்துரையாடல் பிற்போடப்பட்டது!

சனசமூக நிலையங்களின் நிர்வாகத்தினருடன் நடைபெறவிருந்த கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

நாளையதினம் சுன்னாகம் பிரதேசசபை காரியாலயத்தில் நடைபெறவிருந்த கலந்துரையாடலும், எதிர்வரும் புதன்கிழமை சண்டிலிப்பாய் பிரதேசசபை காரியாலயத்தில் நடைபெறவிருந்த கலந்துரையாடலுமே ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

"வர்த்தக தொழில்துறை மன்றத்தின் வளர்ச்சியில் பத்திரிகையாளர்களின் உதவி" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இன்று மாலை 3 மணிக்கு வர்த்தக தொழிற்துறை மன்ற நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்த கலந்துரையாடலில்- ஊடகவியலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு, மேற்படி மன்றம் அழைப்புவிடுத்துள்ளது.

## நெடுந்தீவில் தென்னிலங்கை வியாபாரிகள்!

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், யாழ். குடாநாட்டில் வியாபித்துள்ள தென்னிலங்கையைச் சேர்ந்த நடமாடி விற்கும் தளபாட விற்பனையாளர்கள் - கடந்த 3 நாள்களாக நெடுந்தீவுப் பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவர்களால் - மரக்கட்டில்கள், இரும்புக் கட்டில்கள், தொலைக்காட்சி மேசை மற்றும் அலங்காரப் பொருட்கள் என்பன விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

பெரும் பணம் செலவு செய்து யாழ். நகர் சென்று வாங்கவேண்டிய சில பொருட்கள், இன்று தீவகம் தேடி வந்ததன் மூலம், பலர் பயனடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (113)

## சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஜமாஹா மேற் - 50 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - மெக்கானிக் கிளி, இல.665, நாவலர் வீதி, நல்லூர் குறுக்குத்தெரு சந்தி, நல்லூர். (460)

### தட்டச்சு வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டெழுத்து வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம் 28-08-2003.

தொடர்பு- N.S.T.C.A, 8/1 அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நிறைவையொட்டி

நமது **ஈழநாடு** நடாத்தும்

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

*உயர்தரப் பிரிவு* - (க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள்)

*தலைப்பு* - '21 ஆம் நூற்றாண்டில் அறிவியலின் வளர்ச்சி'

முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

*கீழ்ப் பிரிவு* - (க.பொ.த. சாதாரண தரமும் அதற்குக் கீழ் கற்பவர்களும்)

*தலைப்பு* - 'சூழல் மாசடைதலைத் தடுப்பதில் நமது பங்கு'


முதலாம் பரிசு - ரூபா 3,000
இரண்டாம் பரிசு - ரூபா 2,000
முன்றாவது பரிசு - ரூபா 1,000

### நிபந்தனைகள்

- ✧ கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ✧ கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு, அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ✧ கட்டுரைகள் ஆகக் குறைந்தது 300 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
- ✧ கட்டுரைகளைத் தேர்ந்தெடுப்பதில் நடுவர்குழுவினது ஆசிரியரின் முடிவே இறுதியானது.
- ✧ கட்டுரைகள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

போட்டி முடிவுதிகதி - 10.09.2003

## சந்ததமும் சாந்தியே தா !



நிந்தனது திருவடியே நிதமுஞ் சரணமென்று
வந்தனையே செய்தேன் வடிவேலா - எந்தனது
வாழ்வது பயனற்றுப் பாருளோர் தூற்றிப்
பாழ்பட்டுப் போகாமற் பார்.

கனலில் கருவாகிப் புனலில் உருவாயென்
மனதில் குடிகொண்ட மன்னவா - தினமும்
உந்தனது திருவடியே உளமாரப் பற்றினேன்
சந்ததமும் சாந்தியே தா.

கோடி கோடியாய் உந்தன் கோவிலைநாடிக்
கூடிப் பணிகின்றார் குமரா - தேடிப்
பேறு பதினாறும் பெற்றுயர்ந்து இம்மண்ணில்
ஊறின்று வாழ உரை.

எத்தனை துயரம் என்வாழ்வில் வந்தாலும்
சித்தம் தளராது சிரிக்க - நித்தம்
உந்தனருள் வேண்டும் உரிமையுடன் கேட்பேன்
கந்தனே வந்து கார்.

மட்டுவிலூர் சுதாகரன்


## எப்போது கிடைக்குமப்பா?

அம்மையை அப்பாவை பழம்பெற அண்ணன் சுற்றிட
அகிலம் முழுவதையும் தம்பி சுற்றினான்.
வெம்பினான் தம்பி விநாயகன் பழம் பெற்றதால்
வேஷம் கலைந்து பழனியானான்
பெம்மான் முருகன் பெருந் தெய்வமானான்.
பேரழகு மயிலினில் வேலேந்தி நின்றான்
இம்மாநிலத்தில் ஏற்றதோர் கனிக்காய் உலகம் சுற்றுகிறோம்.
எமக்கது எப்பொழுது முருகா கிடைக்குமப்பா?


காரை எம்.பி.அருளானந்தன்


**சுலபமாக - சொகுசாக - சிக்கனமாக**

**சிங்கப்பூர் சுற்றுலா**



**யாழ்ப்பாணத்திலிருந்து ஒருநாளில் சிங்கப்பூர்**




+ 31.08.2003 இல் எக்ஸ்போ எயர் விமானம்மூலம் இரத்மலானை செல்ல, 01.09.2003 இல் SQ 401 மூலம் 1.35 மணிக்கு சிங்கப்பூர் செல்ல.
+ யாழ்ப்பாணம் - இரத்மலானை - கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் இலவச தொடர்பு கட்டுநாயக்கா - கட்டுநாயக்கா - இரத்மலானை - யாழ்ப்பாணம்
+ சிங்கப்பூர் - தங்கும் SUMMERVIEW HOTEL - சிங்கப்பூர் இலவச போக்குவரத்து
+ SUMMERVIEW HOTEL 3 நாள் இலவச தங்குமிடவசதி. (ஒருஅறை- பதிவுவேண்டும் - இருவர்/மூவர்) காலை உணவு இலவசம்.

04.09.2003 - சிங்கப்பூர் விமான நிலையம் - 19.00 மணி
05.09.2003 - பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் எக்ஸ்போ எயர்மூலம் மு.ப. 11.45 மணிக்கு பலாலி விமான நிலையம்.

*இத்தனை வசதிகளுடனும் கூடிய உல்லாசப்பயணம் செய்வதற்கு*

**போக்குவரத்துக் கட்டணம்**

- ரூபா 45, 000 (ஒருவருக்கு)
- ரூபா 30, 000 (சிறுவர்களுக்குத் தனிப்படுக்கை இல்லை)
- ரூபா 37, 000 (சிறுவர்களுக்குத் தனிப்படுக்கை வசதி)

*சிங்காரச் சீமையிலே சொர்க்கம் போன்ற அழகுமிகு இடங்களுக்குச் சுற்றுலா செல்ல வசதிகள் செய்து தரப்படும். இவற்றுக்குரிய கொடுப்பனவுகளை நீங்களே செய்யவேண்டும்.*

இனி ஏன் தயக்கம்? சகல விபரங்பகளுக்கும் உடனே தொடர்பு கொள்ளவும்.

**COS MOS MARKETING SERVICES**
**200, K.K.S. ROAD,**
**JAFFNA.**
**T.P. 222 - 5461**

(சி-1379)


நமது **ஈழநாடு**

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

## ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்

## சிறுகதை; கவிதைப் போட்டிகள்

**சிறுகதை** - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
முன்றாவது பரிசு - 2,000 ரூபா

**கவிதை** - முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
முன்றாவது பரிசு - 2,000 ரூபா

### நிபந்தனைகள்

- ✧ எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏற்கனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- ✧ மொழிபெயர்ப்பு ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- ✧ கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால் எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- ✧ கதைகள், கவிதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- ✧ ஆக்கங்கள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- ✧ நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- ✧ பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

வடக்கு - கிழக்கைப் பிரிக்கும்

# ஜனாதிபதியின் முயற்சியை எதிர்க்க கூட்டமைப்பு முடிவு

வடக்கு - கிழக்கை இரண்டாகப்பிரிப்பதற்கு ஜனாதிபதி செய்துவரும் முயற்சியை, கூட்டமைப்பு முற்றாக எதிர்ப்பதென்று முடிவுசெய்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு தமிழர்விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமைப்பின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இணைந்துள்ள வடக்கு - கிழக்கை இரண்டாகப் பிரிக்கும் யோசனையை கண்டிப்பதுடன் ஏனைய தமிழ்க்கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் கிழக்கு மாகாணத்தில் 500 பொலிஸார் புதிதாகச் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை, முஸ்லிம்களை ஆயுதங்களை ஏந்த வழிவகுக்கும் என்பதால், இதுவிடயத்தில் அக்கறைகாட்ட வேண்டும் என்றும் மேற்படி கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

# பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பாக சிஹல உறுமய பொய்ப்பிரச்சாரம்!

## தமிழீழ மாணவர் பேரவைத்தலைவர் கஜேந்திரன்

கொழும்பில் பொங்குதமிழ் நிகழ்வினை நடத்த எந்தவித திட்டமும் இல்லாத சூழலில், சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிரான விரோத உணர்வை அதிக்ரிக்க, சிஹல உறுமய கொழும்பில் பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்வதாகச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பொங்குதமிழ் நிகழ்வு நடைபெறவுள்ளதாகவும், அதற்கெதிராக தாங்கள் போராடப் போவதாகவும், சிஹல உறுமய சிங்கள மக்கள் மத்தியில் பொங்கு தமிழ் பற்றி பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றது.

பொங்கு தமிழ் பற்றிய தெளிவரங்கு மட்டுமே கொழும்பில் தம்மால் நடத்தப்பட்டதாகவும், கொழும்பில் பொங்குதமிழ் நடத்தத் திட்டம் எதுவும் இல்லை எனவும், அப்படியான தகவல்கள் எதுவும் தம்மால் வெளியிடப்படவில்லை என்றும் செ.கஜேந்திரன் மேலும் கூறியுள்ளார்.

# ஏ-9 வீதித் திருத்தப்பணி மந்தகதியில்; ஆசிய அபிவிருத்தி வங்கி குற்றச்சாட்டு!

## இந்தவருட முடிவுக்குள் பணியை முடிக்கவும் ஆலோசனை

(கொழும்பு)

ஏ-9 வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகள் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெறுவதாகவும், இந்த வருட முடிவுக்குள் வீதித்திருத்தப் பணிகள் யாவும் முடிவடைந்துவிட வேண்டும் என்றும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனி தெரிவித்துள்ளார்.

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து, ஏ-9 பாதை திருத்தப் பணிகளைப் பார்வையிட்ட பின்னரே சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப்பிரதிநிதி இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஏ-9 வீதிப்புனரமைப்பை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் மிகவும் மந்தகதியிலேயே பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஏ-9 வீதிப் புனரமைப்புக்கு- ஆசியஅபிவிருத்தி வங்கி 600 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கத்திக்குத்தில் காயம்!

மதுபோதையில் இருந்த ஒருவரை இனந்தெரியாத இருவர் கத்தியால் குத்திய சம்பவம் புத்தூர் கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது. இச்சம்பவத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த கிட்ணன் விநாயகமூர்த்தி (வயது 53) என்பவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### துர்க்கை அம்மன் ஆலய மஹோற்சவம்

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் - எதிர்வரும் 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் நியமனம் தொடர்பாக

# செல்வம் அடைக்கலநாதன் கல்வியமைச்சருக்கு கடிதம்



வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு, வெளிமாவட்டங்களில் நியமனம் வழங்கியதையிட்டு, மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்- கல்வி அமைச்சிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த இறுதியாண்டு கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறிய நாற்பத்தேழு ஆசிரியர்களை- கல்வி சட்டதிட்டங்களுக்கு மாறாகவும், அவர்களது விருப்பத்திற்கு மாறாகவும், வெளிமாவட்டத்திற்கு நியமனம் செய்தது தவறெனச் சுட்டிகாட்டியுள்ளார்.

அத்துடன், வட-கிழக்குப் பகுதிகளில் ஆசிரியர் தட்டுப்பாடு இருக்கும் வேளை, இந்த நாற்பத்தேழு ஆசிரியர்களையும் வெளிமாவட்டத்திற்கு நியமித்தது கவலைக்குரிய விடயமாகும். இந்த ஆசிரியர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழும், இடம்பெயர்ந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். தங்களைச் சொந்த மண்ணில் சேவையாற்ற விடாமையாலும், தங்களது குடும்பங்கள் மீளக்குடியமராமலும், புனரமைப்பு போன்ற விடயங்களில் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும், இந்த நாற்பத்திதேழு ஆசிரியர்களும் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றினை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் கொடுத்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு அவர்களது சொந்த இடங்களிலேயே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இது ஒரு புரியாத புதிரென செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

# நெதர்லாந்தில் சிறப்புற நடந்த தமிழர் விளையாட்டுத் திருவிழா

(கொழும்பு)

நெதர்லாந்தில் 'செய்ஸ்ட்' எனுமிடத்தில் - நான்காவது வருடமாக கடந்த 16 ஆம் திகதி ஈழத்தமிழர் விளையாட்டு ஒன்றியத்தால், நெதர்லாந்து - பெல்ஜியம் நாடுகளில் வாழும் தமிழர்கள் பங்குபற்றும் தமிழர் விளையாட்டுத் திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக - நெதர்லாந்து தேசியக்கொடியை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் செல்வம் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர்களிற்கும், பலியான பொதுமக்களுக்குமான அகவணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து பொதுச்சுடரினை தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் ரெஜி ஏற்றிவைத்தார்.

அதனைத்தொடர்ந்து - விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. உதைபந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம், கரப்பந்தாட்டம், தாச்சிப்போட்டி, ஆண்கள், பெண்களுக்கான கயிறு இழுத்தல், சங்கீதக்கதிரை, சிறுவர் - பெரியவர்களுக்கான பலவிதமான சுவட்டு மைதானப் போட்டிகள் எனப் போட்டிகள் நடாத்தப்பட்டன. மைதானத்தில் தமிழீழ உணவகத்தின் சிறப்பான உணவுகள், தமிழர் வர்த்தக நிறுவனங்களின் மலிவு விற்பனைகளும் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழினி சிறப்புரையினை ஆற்றியிருந்தார். அவர் தனதுரையில் கடந்தகால போராட்ட நிகழ்வுகளையும், போராளிகளின் மன உணர்வுகளையும், சமகால அரசியல் நிகழ்வையும், தமிழீழத் தேசியத்தலைவரின் தீர்க்க தரிசனமான வழிகாட்டலையும், புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களின் பங்களிப்பு மற்றும் ஆதரவினையும், தொடர்ந்தும் தமிழ்மக்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் எடுத்துரைத்தார்.

பெண்கள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பணிப்பாளர் சுதர்சினி, தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்திலிருந்து கலைத்தமிழ் ஆகியோரும் தாயகத்திலிருந்து வருகைதந்து மக்களுடன் கலந்துரையாடி இந்நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

போட்டிகள் இரவுவரை நீடித்தன. போட்டிகள் நிறைவுபெற தேசியக் கொடிகள் இறக்கப்பட்டு, பின் மின்னொளியில் வெற்றியாளர்களிற்கான பரிசில்களைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துப் பொறுப்பாளர் வழங்கினார், வெற்றியாளர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டார்கள்.

தொடர்ந்து அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் பார்வையாளர்கள் மத்தியில் நடத்தப்பட்டு, முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளிற்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது.

இரவு 10 மணிக்கு நிறைவு பெற்ற இந்நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

### வெடிபொருட்களை செயலிழக்கச் செய்ய நடவடிக்கை

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் - ஏ.எப்.ரி.கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் மீட்கப்பட்ட வெடிபொருட்களின் ஒருபகுதி விரைவில் அழிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வெடிபொருட்கள் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி செயலிழக்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மயோன் முஸ்தபா அழைப்பு விடுத்த கலந்துரையாடலை புலிகள் பகிஸ்கரிப்பு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினரான மயோன் முஸ்தபா அழைப்பு விடுத்த கலந்துரையாடலுக்கு புலிகள் செல்லவில்லை.

நேற்றுமுன்தினம் கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற 'தற்போ தைய கிழக்கு நிலைமைகள்' தொடர்பான கலந்துரையாடலுக்கே புலிக ளுக்கு அவரால் அழைப்பு விடுக்கப்பட்டது.

இவர் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் எனவும், இவரது கலந்துரையாடல் அவரது கட்சி சம்பந்தப்பட்டது எனவும், இவ்வாறான கந்துரையாடல் அவரது கட்சி நலனுக்கானது எனவும், பள்ளிவாசல் சம்மேளனங்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொதுவாக கூடிக்கலந்துரையாடினால், தாமும் அதில் பங்குகொள்ளுவோம் என்றும், இவரது கலந்துரையாடலுக்குச் சொல்லாதது பற்றி கல்முனைக் கோட்ட புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் தெரிவித்துள்ளார். (07)

# ஐக்கியநாடுகள் சமாதானப் படையில் இலங்கை இராணுவமும் இணைவு!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன், சமாதானப் படையினரை போரினால் பாதிப்புற்ற நாடுகளுக்கு வழங்கும் திட்டத்தில் - இலங்கையும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. 2004 ஆண்டில் பல்நாட்டுப் படைக்கான பயிற்சி இங்கும் நடைபெறும்.

கடந்த மாதம் இச்சமாதானப் படைகளுக்கான பயிற்சி இலங்கையில் நடைபெற்றது. இதன் பின்னர் நான்கு படை அதிகாரிகள் கொங்கொங்கிற்கும், சகாராவின் மேற்குப் பகுதிக்கும் அனுப்பப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் தற்போது சமாதானச் சூழல் தொடர்வதாலும், போர் அனுபவங்கள் அதிகம் இருப்பதாலும், இலங்கைப் படையினரில் சிறிய தொகையினரேனும் ஐக்கிய நாடுகளின் சமாதானப்படையில் இணைந்து, சிறிது காலம் கடமையாற்றுவது மிகுந்த அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கு உதவுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 135 படையதிகாரிகளும், 14 வேறு தரத்தில் உள்ளவர்களும், ஐக்கிய நாடுகள் சபையின் சமாதானப் படைக்கான பயிற்சியைப் பெற்றுள்ளார்கள்.

இந்தப் பயிற்சி படையினரின் மனோநிலையில் மாற்றங்களைக் கொண்டுவரும் எனவும், மேலும் ஆயிரக்கணக்கான போர் வீரர்களுக்கு ஊக்கத்தையும் கொடுக்கும் எனவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில்

# பொலிஸ் ஆட்சேர்ப்புக்கான நேர்முகத் தேர்வு ஆரம்பம்!

கிழக்கு மாகாணத்தில் பாதிப்புக்குள்ளான முஸ்லிம் இளைஞர்களை, பொலிசில் சேர்ப்பதற்கான நேர்முகத்தேர்வு - கிழக்கு மாகாணத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, மூதூர், திருகோணமலை, பொத்துவில், கல்முனை ஆகிய பகுதிகளில் இந்த நேர்முகத்தேர்வு நடைபெற்றுவருகின்றது.

இந்த நேர்முகத்தேர்வில் ஐம்பது பொலிஸ் அத்தியட்சகர்களும் ஐந்நூறு பொலிஸ் கொன்ஸ்டபிள்களும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

நேர்முகத்தேர்வுக்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் நேர்முகநிலையங்களிற்கு சமூகமளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த நேர்முகத் தேர்வை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழுமையாக எதிர்ப்பதாகவும், இது தொடர்பாக எதிர்வரும் புதன்கிழமை பிரதமரை சந்திக்கவிருப்பதாகவும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

### தவறிவீழ்ந்த குழந்தை காயம்!

(வடமராட்சி)

தாயின் கையில் இருந்து தவறி வீழ்ந்த கைக்குழந்தை படுகாயமடைந்த சம்பவம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்றது.

பிறந்து 38 நாட்களேயான இ.தயாளினி எனும் பெண்குழந்தையே படுகாயமடைந்துள்ளது. குழந்தையின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதால் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# பல்கலைக்கழக ஊழியர்களின் 5 கோரிக்கைகள் ஏற்கப்பட்டன!

## மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளில், 5 கோரிக்கைகளுக்கு முடிவு காணப்பட்டுள்ளதாக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளில் மேலும் பதினேழு கோரிக்கைகளுக்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து நடைபெறும் போராட்டத்தால் - ஆயிரக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் கல்விசாரா ஊழியர்களை உடன் கடமைக்கு திரும்புமாறும் அவர் கேட்டுள்ளார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பொற்பதிக் கிராமத்தை பார்வையிட்டனர்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினரும், பல்கலைக்கழக மாணவர்களும் - இராணுவம் புதிதாக முகாம் அமைக்கும் பொற்பதிக் கிராமத்துக்கு, நேற்று முன்தினம் சென்று, அப்பகுதி நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சென்ற இவர்கள், அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக அப்பகுதி மக்களிடம் கேட்டறிந்தனர்.

இவர்களிடம் கருத்து தெரிவித்த மக்கள் - படையினர் முகாம் அமைக்கத் தொடங்கியது முதல், தாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருவதாகவும், இம்முகாம் விஸ்தரிப்பினால், தமது அன்றாடப் பணிகள் பாதிக்கப் படுவதாகவும்; தமது இருப்பிடங்களுக்கு மிக நெருக்கமாக முகாம்களை இராணுவம் அமைத்து வருவதனால், காலைக் கடன்களைகூட கழிக்க முடியாதுள்ளதெனவும் தெரிவித்துள்ளனர்.

மீனவர் சங்கச் செயலாளர் இச்சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கையில், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர்மூலம் தெரியப் படுத்தியபோது, அங்கு வந்த அவர்கள் - படையினருடன் நீண்டநேரம் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு, முகாம் அமைத்தல் சரியென கூறியுள்ளனர்.

எனவே, எக்காரணம் கொண்டும் தமது கிராமத்தை இராணுவ வலயங்களால் முற்றுகையிடப்படுவதினை அனுமதிக்கப்போவதில்லை எனவும், அதற்கெதிராக தாம் தமது எதிர்ப்பினை வெளிக்காட்டுவோம் எனவும், அப்பகுதி மக்கள் மாணவர்களிடம் தெரிவித்துள்ளனர்.



புங்கன்குளம் அரியாலை சனசமூக நிலையத்தின் 54 ஆவது ஆண்டுவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ம.விஜயகுமாரும் அவரது பாரியாரும் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

(55)

# முரசுமோட்டைப் பகுதியில் அறிவகம் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது

(கிளிநொச்சி)

முரசுமோட்டை புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில், அறிவகம் மண்டபம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப் பட்டது.

பரந்தனைச் சேர்ந்த இ.சிவகுருநாதனால் - ஐம்பதினாயிரம் ரூபா செலவில், இந்த வித்தியாலயத்தில் ஆண்டு-11 இல் கல்விகற்றுக் காலமான - அவரின் மகன் சிவேந்திரன் ஞாபகார்த்தமாக இந்த மண்டபம் அமைக்கப்பட்டது.

மண்டபத் திறப்புவிழா அதிபர் தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது. அறிவகக் கட்டடத்தைக் கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.சிற்றம்பலம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

அறிவகப் பெயர்ப் பலகையை, மண்டபம் அமைத்த இ.சிவகுருநாதனாலும், அவரது பாரியாரும் திரை நீக்கம் செய்துவைத்தனர். சிவேந்திரனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை - பரந்தன் பிரதேசப் பொறுப்பாளர் செ.சுதா ஏற்றிவைத்தார்.

# சமுர்த்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நெடுந்தீவில் வீதிகள் புனரமைப்பு!

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் - 'சமுர்த்தி மக்கள் கருத் திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2003' இன்கீழ் - நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவில் விவசாய, மீன்பிடி வீதிகளைத் திருத்தத்துக்கென, ஒரு லட்சத்து 87 ஆயிரத்து ஐந்நூறு ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமிய சமுர்த்தி செயலணியின்கீழ், மக்களின் பங்களிப்புடன் இவ்வீதிகள் செப்பனிடப்படுகின்றன.

கிராம அலுவலர் பிரிவுகள்-யா/2, யா/3, யா/4, யா/5, யா/6 ஆகிய பிரிவுகளில் முறையே - சாறாப்பிட்டி விவசாயவீதி, சாட்டி மீன்பிடி வீதி, பற்றிமாகோயில் மீன்பிடி வீதி, மின்சார நிலைய கிழக்கு மீன்பிடி வீதி, செபநாயகபுர மீன்பிடி வீதி என்பன இத்திட்டத்தின்கீழ் செப்பனிடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கலாசார உத்தியோகஸ்தர்களுக்கான கூட்டம்!

சகல பிரதேச செயலகங்களையும் சேர்ந்த கலாசார உத்தியோகத்தர்களுக்கான கூட்டம், எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில், பதில் அரச அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

# நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வாகனத் தரிப்பிடங்கள் அறிவிப்பு!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலயத் தேர்த் திரு விழாவை முன்னிட்டு, ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் நன்மை கருதி, ஆலயச் சுற்றாடலில் வாகனங்கள் தரிப்பதற்கான ஒழுங்குகள் பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் - யாழ்.மாநகர சபையில் இடம்பெற்ற கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், வாகனங்களை நிறுத்துவதற்கான இடங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு.

பருத்தித்துறை வீதியால் வரும் வாகனங்கள் - செம்மணி வீதி வலது பக்கத்திலும், நல்லூர் குறுக்குத்தெரு வீதியின் கிழக்குப் பக்கமும், செட்டித் தெருவின் வலது பக்கமும் நிறுத்த அனுமதிக்கப்படும்.

அதேபோல், பிரமணக்கட்டு வீதியால் வரும் வாகனங்கள்- கைலாச பிள்ளையார் கோயிலடியிலும், கோயில் வீதியின் வலது பக்கமும், வைமன் வீதியின் வலது பக்கமும், வீரமாகாளி அம்மன் கோயில் வீதியிலும், கோயில் வீதியால் தெற்கு நோக்கி வரும் வாகனங்கள்- பண்டாரிக்குளம் வீதியிலும், சட்டநாதர் வீதியிலும் நிறுத்த அனுமதிக்கப் படும்.

சிவன் புதுவதி, அரசடி வீதி, என்பனவற்றில் வாகனங்கள் தரிப்பதற்கு முற்றாக அனுமதிக்கப்பட மாட்டாது என, யாழ்.மாநகரசபை செயற்குழு அறிவித்துள்ளது.

# உள்ளூராட்சி மன்றங்களுடன் மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## உதவி ஆணையாளர் கிருஷ்ணசாமி

உள்ளூராட்சி மன்றங்கள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து செயற்பட்டு வருகின்றது. இவ்வாறு சேவைபுரியும் உள்ளூராட்சி மன்றங்களுடன் - மக்களும் மிகுந்த அக்கறையுடன், நெருக்கமாகச் செயற் படுவதன்மூலமே அவர்களுக்கான சேவைகளைப்பெற முடியும் என - உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற வலி. தெற்குப் பிரதேசசபையின் உள்ளூராட்சி வாரநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்- "கருவிலிருந்து கல்லறைவரை" சமுதாயத்துக்குச் சேவைபுரியும் ஸ்தாபனம் என்றால், அது உள்ளூராட்சி மன்றங்களேயாகும்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சுகாதார வைத்திய நிலையங்களூடாகவும், நோயுற்றவர்களுக்குச் இலவச ஆயுர்வேத வைத்திய சேவை புரிவதன் மூலமும், வீதிகள், சந்தைகள், மயானங்கள் போன்றவற்றைச் சுத்தப்படுத்தி - மக்கள் பயன்பாட்டிற்கும், நடமாட்டத்திற்கும் ஏற்ற வகையில் அமைத்துக் கொடுப்பதன்மூலமும், உள்ளூராட்சி மன்றங்கள் மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தே செயற்படுகின்றது.

ஆரம்பகாலத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு மக்கள் மத்தியிலிருந்து, மக்களாலேயே வாக்குச் சீட்டுப் போடுவதன்மூலமே பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு பலவிதத்திலும் ஒத்துழைப்பு நல்கும் உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்களின் பங்களிப்பை மேலும் விருத்தியடையச் செய்யும் முகமாகவே நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவன ஏற்பாட்டில் சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டி!

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன செயற்திறன் அரங்க இயக்கத்தினர், சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டியொன்றினை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.


சிறுவர் உளநல மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாக, எழுத்துருவின் கருப்பொருள் அமைந்திருக்கவேண்டும்.

எழுத்துரு, சிறுவர் உளப்பாங்கிற்கு ஏற்ப - 30 நிமிடங்கள் ஆற்றுகை செய்யக்கூடியதாகவும், சிறுவர் - பார்வையாளர்களை இலக்காகவும் கொண்டு எழுதப்படுவதுடன், இந்த எழுத்துரு முன்பு பிரசுரிக்கப் பட்டதாகவோ, மேடையேற்றப்பட்டதாகவோ இருத்தல்கூடாது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் படைப்பாளிகள், தமது ஆக்கங்களுடன், சுயவிபரத்தையும் தனியான ஒருதாளில் எழுதி, செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் - 'செயற்திறன் அரங்க இயக்கம்', அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வெற்றிபெறும் படைப்பாளிகளுக்கு - பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.


வாழ்க வளமுடன்




முதலாவது அகவையில்

பெயர் : ச.ஸோவிதா
முகவரி: கட்டுடை, மானிப்பாய்.



ஆறாவது அகவையில்



பெயர் : சி.அபர்ணா
முகவரி: இணுவில் கிழக்கு, இணுவில்.

ஏழாவது அகவையில்

பெயர் : சி.சந்துஷன்
முகவரி: 42:.6, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------------
பெற்றார் ஒப்பம்

# அட்ராசக்கை அட்ராசக்கை




கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் மைதானத்திலும்சரி வெளியிலும்சரி ஹீரோக்கள்தான். அதிலும் மைதானத்தில் அவர்கள் பாவிக்கின்ற உபகரணங்களுக்கு அவர்கள்தான் விளம்பரங்கள். எத்தனையோ கிரிக்கெட் உபகரண நிறுவனங்கள், போட்டி போட்டுக்கொண்டு, நட்சத்திரக் கிரிக்கெட் வீரர்களை ஒப்பந்தம் செய்வதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அண்மையில் சனத் ஜயசூரிய பவுண்டரிகளாலும் சிக்ஸ்களாலும் பார்வையாளர்களைக் குளிரவைத்துக் கொண்டிருந்த நேரத்தில் - அவர்மீது சரமாரியான புகார்கள் எழுந்தன. ஒரு சிலர் அவருடைய துடுப்புமட்டையைப் பரிசோதித்து, அதற்குள் ஏதேனும் சுருள் இருக்கின்றதா? என்று பார்த்தும் இருக்கின்றார்கள்.

அவர் பாவித்த, பாவித்து வருகின்ற துடுப்புமட்டை குக்காபுரா. இது சர்வதேச அளவில் பெரிதாகப் பிரபலம் பெறாமல் இருந்த காலகட்டத்தில் - இலங்கை வீரர்களாகிய அரவிந்த, சனத் ஆகியோர்தான் கூடுதலாக இந்த மட்டையைப் பாவித்து விளாசித்தள்ளியவர்கள். இதன் காரணமாக இந்தத் துடுப்புமட்டைக்குச் சர்வதேச அளவில் ஒரு அங்கீகாரம் கிடைத்தது.

உலகிலேயே அதிபாரமான துடுப்பு மட்டையைப் பாவித்த பெருமை - அரவிந்த டி சில்வாவினையே சாரும். தற்போது நியூசிலாந்து அணியின் நாதன் ஆஸ்ரல் இந்த மட்டைக்கு மாறியிருக்கின்றார். இந்த மட்டை ஒரு வித்தியாசமான வில்லோ மரத்தில் செய்யப்படுகிறது. இதனை, ஏறக்குறைய 139.99 பவுண்ஸிற்குப் பெற்றுககொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆரம்பகாலத்தில் இந்தத் துடுப்புமட்டையைப் பழித்த அவுஸ்திரேலிய அணியினர் இப்போது இந்த மட்டையை பெருமளவில் பாவிக்கின்றனர். கில்கிறிஸ்ட் ஒருவரே போதும். அதிரடிக்கு குக்காபுராதான். இங்கிலாந்து அணியின் அலுவலகத் துடுப்பு இப்போதும் கிளினிக்கல்ஸ்தான். 2003 ஆம் ஆண்டு வந்த அருமையான துடுப்பு விரல்களால் சுழற்றி ஆடக்கூடிய இலகுவான கைபிடி இதுவும் - இயற்கை வில்லோ என்ற ஒருவகையான மரத்தால் செய்யப்பட்டது. இதனுடைய விலை 159.99 ஸ்ரேலிங் பவுண்ஸ். ஆரம்பகாலத்தில் இங்கிலாந்து ஆட்டக்கார்ரர்களால் மட்டுமே பாவிக்கப்பட்ட இந்த மட்டை, இப்போது தென்னாபிரிக்க மற்றும் மேற்கிந்திய அணியினராலும் பாவிக்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக மேற்கிந்திய அணியின் நட்சத்திரவீரர் பிறயன்லாரா, டெஸ்டில் அதிகூடிய 375 ஓட்டங்களை பெற்ற, இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் போட்டியில் பாவித்த துடுப்புவகை கிளினிக்கல்ஸ் கம்பனியிலிருந்து வந்ததாகும். மறைந்த தென்னாபிரிக்க வீரன் கான்ஸி குறொன்ஞே பாவித்த துடுப்பு மட்டையும் இந்த வகையாகும். இந்தத் துடுப்பில் இரட்டைக் குழி, ஒற்றைக்குழி என்ற இரண்டு வகை உண்டு. கூடுதலாக ஒன்றைக்குழியைத்தான் வீரர்கள் விரும்பிப்பாவிக்கின்றார்கள். வி-சலசன்ஜர் என்ற துடுப்பு மட்டை இங்கிலாந்தில் தயாரிக்கப்படுகின்றது. V.300, V.400, V 500 என்று இதனுடைய பலம் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது.




இந்தத் துடுப்பைக் கூடுதலாகப் பாவித்த வீரர்கள், மேற்கிந்திய வீரர்கள். அதிலும் விவியன் ரிச்சட் இந்தத்துடுப்பின்மூலம் ஒருகலக்குக் கலக்கியவர். இதனுடைய விலை 59.99 ஸ்ரேலிங் பவுண். கூடுதலாக இந்த மட்டையினுடைய நிறை அடியிலேயே காணப்படுகின்றது.




ஓரளவு மெல்லிய கைப்பிடி இந்த மட்டையின் சிறப்பம்சமாகும். அண்மையில் வெளிவந்த பின்வகை டீகிளாசிக் இதுதான். இப்போது நட்சத்திர ஆட்டக்காரர்கள் சிலரது கைகளில் காணப்படுகின்றது.

அமெரிக்கத் தயாரிப்பாகக் காணப்படுகின்ற பேஸ் வம்பயர் ஒரு ஆச்சரியத்துக்குரிய துடுப்புமட்டையாகும். இதனுடைய விலை 209.99 அமெரிக்க டொலர்களாகும். கூடுதலாக இந்திய அணி வீரர்களும் பாகிஸ்தான் அணி வீரர்களுமே இந்த மட்டையைப் பாவிக்கின்றார்கள். இந்த மட்டைமூலம் பிரபலமாகியவர்களில் இந்திய அணியின் முன்னாள் வீரர் நவஜோத்சிங் சித்துவும் ஒருவர். இது இங்கிலாந்து வில்லோ மரத்தால் செய்யப்படுகின்றது.

இந்தத்துடுப்பு பந்தினைத் தள்ளிவிடும். துடுப்பாட்டக்காரர்களுக்கு மிகப் பொருத்தமான கைபிடி ஓரளவு மொத்தமானது. அண்மையில் சந்தைக்கு வந்த மட்டைகளில் பேஸ் வம்பயர் பிளாஸ்டர் மிகவும் பெயர்போனது. உண்மையில் ஒரு அற்புதமான கிரிக்கெட் வீரனுடைய திறமை அவன் பாவிக்கின்ற மட்டையிலே காணக்கூடியதாக இருக்கின்றது.

இன்று சர்வதேச அளவில் பிரபல்யம் பெற்றுள்ள ஜி.எம்., கவுண்டி ஆகிய துடுப்புக்கள் இருந்தாலும், சில ஆட்டக்காரர்கள் இந்தத் துடுப்புமட்டைகளை அவ்வளவாக விரும்புவதில்லை. அண்மையில் இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் பெறப்படுகின்ற ஒருவகையான வில்லோ மரத்தில் இருந்து தயாரிக்கப்படுகின்ற துடுப்பு மட்டைகள் சந்தையில் நல்ல பெயரைப் பெற்றிருக்கின்றன. சயீட் அன்வருடைய ஒரு நாள் சர்வதேச அதிகூடிய ஓட்டங்களை இந்தியாவுக்கெதிராகக் குவித்தது, இந்தக் காஷ்மீர்வில்லோ துடுபபு மட்டையால்தான். இன்றைய கிரிக்கெட் உலகில் துடுப்புமட்டைத் தெரிவு மிகமுக்கியமான ஒன்றுதான்.

P.N.சுதர்சன்.

# சிறந்த விக்கெட் காப்பாளர்


ஸ்ரூவார்ட் அதிரடி நாயகன்

இங்கிலாந்து அணியில் இன்றுவரை நிலையாக நின்று அணியின் வெற்றிக்கு வலுச்சேர்த்து நிற்பவர் யார் என்று கேட்டால், நிச்சயமாக அது அலெக் ஸ்ரூவார்ட் என்றே பதில் வரும்.

38 வயதைக் கடந்தும் கம்பீரமாக, வளைந்து நெளிந்து, பாய்ந்து, விழுந்து, விளையாடும் அலெக்ஸ் ஸ்ரூவார்ட் தன்னை விட அணியின் நலனைக் கவனிப்பதையே நோக்கமாகக் கொண்டவர். மைதானத்தில் இறங்கி விட்டால் அலெக்ஸ் ஸ்ரூவர்ட் விளையாடும் அணிக்காகவே ஆட்டத்தைப் பார்ப்பதற்கென்றே ஏராளமான ரசிகர்கூட்டம் குழுமிவரும்.

தனது முதலாவது டெஸ்ட் போட்டியை 1990 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராகவும், ஒருநாள் போட்டியை 1989 ஆண்டு இலங்கை அணிக்கெதிராகவும் விளையாடிய அலெக்ஸ் ஸ்டூவார்ட், இதுவரை 130 Test போட்டிகளில் 15 சதங்கள், 44 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 8326 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (சராசரி 39.84 அதிகூடிய ஓட்டம் 190)

அத்துடன் இதுவரை 170 ஒருநாள் போட்டிகளில் 4 சதங்கள், 28 அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 4677 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (சராசரி 31.60, அதிகூடிய ஓட்டம் 116)

ஒரு அணிக்கு- விளையாட்டின்போது அவ்வணி குறைந்த ஓட்டங்களுக்குள் சிதைத்து போகாமால் தடுக்கும் பொறுப்பு விக்கட் காப்பாளனையே சாரும். நின்று ஆடவேண்டிய நேரத்தில் நின்று நிதானமாக ஆடியும், விளாசவேண்டிய நேரத்தில் அதிரடியாகவும் ஆடி, அணியின் வெற்றிக்கு உரமாக நிற்பவர்கள் இவர்களே. தென்னாபிரிக்காவில் - மார்க் பவுச்சர், அவுஸ்திரேலியா அணியில்- இயன்ஹீலி, பாகிஸ்தானில் முன்னாள் வீரர் மொயின்கான், இந்தியாவில் முன்னாள் வீரர் விஜய்டாகியா என்பது போல் அதனை விட மேலான உதாரணமாக இங்கிலாந்து அணியின் விக்கட் காப்பாளர் அலெக்ஸ் ஸ்டூவர்டையே கூறிக்கொள்ளலாம். இடைத்தர நிலையில் வந்து அணிக்காக மிகச் சிறப்பாக துடுப்பாட்டம் செய்யும் அலெக்ஸின் பிரதான பங்கு விக்கெட் காப்பாளர் பணியே. மிக மிகச் செம்மையாக, நேர்த்தியாக வக்கட்டின் பின்னே கலகலப்பாக நின்று சிறப்பாகத் தன்பணிகளைச் செய்யும் அலெக்ஸ் ஸ்ரூவர்ட், தான் டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். ஆனால் இவரின் இடத்தை நிவர்த்தி செய்வதற்கு இங்கிலாந்து அணிக்கு இன்னும் அதிக காலம் எடுக்கும் என்பதில் மறுப்பில்லை.

A.V.Kovi


அட இப்படியும் சாத்தியமா?

# விபத்து விளையாட்டல்ல


உண்மைகள் மூடப்பட்டுவிடக்கூடாது.

இலங்கையின் எப்பாகத்திலும் இன்று மக்கள் எதிர்கொள்ளும் துர்ப்பாக்கியம் வீதிவிபத்துக்கள். இதன் அனர்த்தங்கள் பாதிப்புக்கள், இழப்புக்கள் சொல்லித்தான் தெரிய வேண்டியதல்ல. இந்த வகையில் இன்னொரு அசம்பாவிதம் சிலதினங்களுக்கு முன் கம்பஹாவில் - ஒரு பஸ்தரிப்பிடத்தில் நடைபெற்றுமுடிந்துள்ளது. இதில் சுங்கப் பகுதியில் கடமையாற்றும் மகன் படுகாயமடைய, அவரது தாயார் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரத்தைச் சேர்ந்த திருமதி குமுதினி தர்மவீர என்பவரே இவ்விபத்தில் கொல்லப்பட்டவர். அவரது மகன் நுவன் சிறிபால படுகாயமடைந்தவர். இந்தக்கார் விபத்தில் காரை ஓட்டிச் சென்றவர் இலங்கைத்தேசிய கிரிக்கெட் அணியின் புதுமுகமும், சிறந்த சகலதுறை வீரராகத் தன்னை வெளிப்படுத்தியவரும், வயது இருபத்தொன்று மட்டுமே நிறைந்தவருமான கௌஷால் லொக்கு ஆராசசி. இவர் தனது கிரிக்கெட் கழகத்தில் ஒரு விருந்தில் கலந்துகொண்ட பின் அதிகாலை வேளையில் தனது வீடு நோக்கிச் செல்லும்போது அவருக்கு என்ன நடந்தது" என்று தெரியாமல் அந்த விபத்து நடைபெற்று முடிந்துள்ளது. இதன் தொடர்பில் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை சில முடிவுகளை எடுத்திருக்கிறது. இவர் பின்னர் எதிர்நோக்கவேண்டியுள்ள ஒரு விசாரணையின் பொருட்டு சகலவிதமான கிரிக்கெட் நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இருந்தும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளார். மேலும் இந்த முடிவு சபையின் ஏகோபித்த முடிவாக எடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர் புரிந்துள்ள தவறு ஒரு தேசிய கிரிக்கெட் வீரரின் தவறு என்ற வகையில் பார்க்கப்படும் என்றும், பொருத்தமான நடவடிக்கை பின்னர் எடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. இங்கு, இவரது கிரிக்கெட் எதிர்காலம் ஊசலாடத் தொடங்கியுள்ளது தெளிவாகிறது. இவர் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்படும் பட்சத்தில் ஒருவருடத்திலிருந்து மூன்று வருடங்கள்வரை தடையை எதிர்நோக்கக் கூடும்" இது ஒருபுறமிருக்க, எமது வாழ்க்கை முறைகளுக்கு அப்பாற்பட்ட அதீதகற்பனைகள் நிறைந்த FAST LIFE முறைமைக்கு பலர் சென்றுகொண்டிருப்பதன் விளைவுதான் இது என்றும் எண்ணத்தோன்றுகிறது. சில விளையாட்டுத்துறைகளில் புரளும் பெருந்தொகைப்பணம், அதனால் ஏற்படும் நாகரீகவாழ்க்கை மோகம், நாட்டின் நிலையை மறந்து வசதிவாய்ப்புக்கள் நிறைந்த சிறுகுழு மனப்பான்மை, ஒருவகை மிதப்பு, சிலவேளைகள் செல்வாக்குகளின் பாதுகாப்பு இருக்கும் என்ற அலட்சியப்போக்கு, என்று அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால், இலங்கைபோன்ற நாட்டின், பொதுவாக மக்கள் வாழ்க்கைக்கு உதாரணம் - அந்த பஸ்தரிப்பில் நின்று உயிரிழந்தது தாய்தான். கௌஷால் போன்ற அதிவேக கார்ஓட்டக்காரர்கள் அல்ல.

இந்த விடயம் தொடர்பில் கௌசல்ய பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை பற்றி சுங்கத் திணைக்கள அதிகாரிகள் சங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. அதாவது சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிராத நிலையில் வாகனத்தை ஓட்டியவரும், ஒரு மரணத்துக்கும் - இன்னொருவர் படுகாயங்களுக்கு உள்ளாகவும் - தனியார், அரச சொத்துகளுக்கு சேதம் விளைவித்தவருமான இவருக்கு, பிணை அளிக்கப்பட்டது எவ்வாறு. என்று இந்த சங்கம் வினா எழுப்பியுள்ளது.

எனவே இங்கு முக்கியம் - இவரது கிரிக்கெட் எதிர்காலம் என்பதல்ல. எந்தக் 'கொம்பனும்' சட்டத்துக்கு முன்னால் சமனானவன் என்று உறுதிப்படுத்தப்பட்டாகவேண்டும். உண்மைகள் மூடப்பட்டுவிடக்கூடாது.

# பெல்ஜியத்தில் பனிப் போர்



கிம் கிளிஜ்ஸ்டர்ஸ் - பனிப்போர் ஆரம்பம்.

செரினா வில்லியம்ஸ் எதைச் செய்தாலும், அதன் தொடர்ச்சியாக வேறு செயற்பாடுகளும் இருக்கும். தற்போது அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் செரினா விளையாடமாட்டார் என்பதால், இந்தப் போட்டியின் சாம்பியன் வெல்பவர் யாரென்பதில் ஒரு உக்கிரம் ஏற்பட்டு விட்டது. எனவே, செரினா விளையாடி இருந்தால், அவர்தான் சாம்பியனாகி இருப்பார் என்பது போட்டிகளின் முன்பே தீர்மானிக்கப்பட்ட விடயம் என்பது முடிவாகிறது.

இதற்கிடையில் பெல்ஜியம் நாட்டின் கிளிஜ்ஸ்டர்ஸ் மற்றும் ஜஸ்ரின் ஹெனின் இருவரும் தானே சாம்பியன் பட்டம் வெல்லவேண்டும் என்று களமிறங்குவது தெரிகிறது. அத்தோடு, அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள கருத்து மோதல்களும் வீரியம் பெறுவதும் தெரிகின்றது. ஹெனின் அண்மைக் காலத்தில் மார்ட்டினா ஹிங்கிசின் திறமையும், உலக அதி பார குத்துச்சண்டை வீரர் லெனொக்ஸ் லூயிசின் மூர்க்கமும் கொண்டவர் என்று ஊடகங்களால் வர்ணிக்கப்பட்டவர். அத்தோடு, ப்ரெஞ்ச் ஓப்பனில் அரை இறுதிப்போட்டியில் செரினாவை வென்றபோது, இவர் நடந்துகொண்ட முறை அமெரிக்க ரசிகர்களுக்கு திருப்தியாக இல்லை. எனவே, ஹெனின் அமெரிக்க ரசிகர்களின் ஆதரவைப் பெறுவாரா என்பதிலும் சந்தேகம் உண்டு. மாறாக, கிளிஜ்ஸ்டர்ஸ் அமெரிக்க ரசிகர்களின் ஆதரவைப் பெற்றவராகவே இருக்கிறார். இது இவருக்கு உளவியல்ரீதியாக உயர் நிலையைக் கொடுக்கும் என்பதும் உண்மை. அதேவேளை, **Grand Slam** வெல்லாமலே தரவரிசை ஒன்றில் இருக்கும். கிளிஜ்ஸ்டர்சை எப்படியும் **Grand Slam** வென்றதான் தோற்கடிக்கவேண்டும் என்ற வெறியும் ஹெனினுக்கு இருக்கும். பொதுவில் இவர்கள் இருவருமே அமெரிக்கன் ஓப்பனில் எதிர்பார்க்கப்படும் வீராங்கனைகளாக இருக்கிறார்கள். நான் அரை இறுதிப்போட்டியில் அல்லது இறுதிப் போட்டியில் ஹெனினைச் சந்திப்பேன். அப்போது நானே முதன்மையாக இருப்பேன் என்கிறார் கிளிஜ்ஸ்டர்ஸ். இதையே ஹெனினும் கூறுகிறார்.



ஜஸ்ரின் ஹெனின் வெற்றிமுதல் மற்றவை பின்னர்

ஆகவே, அமெரிக்கன் ஓப்பனில் இவர்கள் இருவரின் போட்டி ஆரோக்கியமான போட்டியாகத்தான் இருக்கும் என்றால் அது சமாளிப்புக்குக் கூறுவதாகத்தான் இருக்கும். போட்டியும், பொறாமையும், வெறியும் தான் விஞ்சிநிற்கும்போலத் தெரிகின்றது. விளையாட்டின் மகத்துவம் என்பது இதுதான் என்று சிறார்கள் நம்பிவிடாமல் இருப்பதை உறுதிசெய்வதே பெரும்பாடாகப் போய்விடும் போலத்தான் இருக்கின்றது.

**- சித்ரா**

# ஊரெல்லாம் உன் பேச்சு



மரியன்ஜோன்ஸ் - மொன்ட்கொமறி


ஒலிம்பிக் போட்டியொன்றில் அதிக பதக்கங்கள் வென்றவர் என்றால் பெண்கள் வரிசையில் அது அமெரிக்காவின் மரியன் ஜோன்ஸ்தான். 2000 சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் மூன்று தங்கப் பதக்கங்களும் இரண்டு வெண்கலப் பதக்கங்களும் வென்றவர் அவர். அவரது விருப்பமெல்லாம் ஜெசி ஓவன்ஸ் மற்றும் கார்ல் லூயிசை விட ஒரு பதக்கமாவது அதிகம் எடுக்க வேண்டுமென்பதாகும். அதனையே சிட்னியில் அவர் செய்தார். இப்பொழுது மகனைப் பெற்றெடுத்த பின் மீண்டும் பேசுகிறார் மரியன் ஜோன்ஸ். ஏதென்சில் சில பல பதக்கங்களை வெல்வதே எனது அடுத்த இலக்கு என்கிறார். ஆனால், எத்தனை என்பதை அவர் கூறவில்லை. அதற்கு இன்னமும் நேரம் வரவில்லை என்கிறார் மரியன்.

மகன் பிறந்து ஒரு மாதம் கடந்ததுமே எனது பயிற்சிகளை மெதுவாக ஆரம்பித்துவிட்டேன். நான் சிறப்பான உடற்தகுதியுடனேயே இருக்கிறேன் என்கிறார் அவர். மேலும் முன்னர் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் அம்மாக்கள் தங்கம் வென்றுள்ளார்கள். எனவே எனக்கும் அது பொருந்தும் என்கிறார். எதுவித சலனமும் இல்லாமல் முன்னதாக வந்த செய்திகளின்படி செப்ரம்பரில் தான் களம் இறங்கப்போவதாகக் கூறியிருந்தவர் தற்போது இன்னும் சரியாகத் தீர்மானிக்கவில்லை என்கிறார். மேலும், தனது விருப்பமான நிகழ்வுகளான 100, 200 மீற்றர் ஓட்டங்கள் மற்றும் 4x400 அஞ்சலோட்ட நிகழ்வுகளில் சிட்னியில் தங்கம் வென்றவர். இன்னும் நீளம் பாய்தல், **4x100m**, **4x200m** நிகழ்வுகளில் இம்முறை பல ஆச்சரியங்களை நிகழ்த்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நான் முன்பு விட்ட தவறுகளில் இருந்து பாடம் கற்றுள்ளேன். எனக்கு வயதும் 27 ஆகிறது. அதோடு சிறந்த பயிற்றுநராக தொழில்நுட்ப மற்றும் தொழில் நுணுக்க ரீதியில் உயர்ந்த தகைமை கொண்ட சார்லி பிரான்சிஸ் பயிற்றுனராக உள்ளமை மிகுந்த வாய்ப்பாக அமைகிறது என்கிறார். கடந்த சில மாதங்களாக மரியன் பற்றிய செய்திகள் குறைவாகவே இருந்தன. ஆனால் இனி தடகள உலகில மரியன் இல்லாமல் செய்திகள் இல்லை என் நாளும்.

**-சரண்யன்**

# விளையாட்டின் புதிய போக்கு



பெக்கம் - அழகும் திறமையும் சேர்ந்து அப்பப்பா!

அண்மைக் காலத்தில் உதைபந்தாட்ட உலகில் பரபரப்பாகப் பேசப்பட்ட இரண்டு விடயங்கள் - டேவிட் பெக்கம் மற்றும் றியல் மட்ரிட் அணி. தற்போது உலக நட்சத்திரங்களைத் தன்னகத்தே ஈர்த்து வைத்திருக்கும் றியல் மட்ரிட் அணி. ஒரு ஆசிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளது. இந்த வகையில், சீனா சென்று தற்போது சுற்றுப் பயணத்தின் இறுதிக்கட்டமாகத் தாய்லாந்தில் விளையாடி 2-1 என்று தாய்லாந்து தேசிய அணியைத் தோற்கடித்துள்ளார்கள்.

தாய்லாந்து வருவதற்கு முன் ஹொங்கொங்கில் விளையாடிய ஸ்பானிய அணியான றியல் மட்ரிட் 4-2 என்று ஹொங்கொங் எதிர் அணியைத் தோற்கடித்தது. நான்கு கோல்களில் இரண்டைப் போட்டவர் வெகு பிரபல்யமான பிறேசில் வீரர் றொனால்டோ. மேலும், றியல் மட்ரிட் அணியில் விளையாடும் வீரர்கள் பிரான்ஸின் லிடானே, போர்த்துக்கலின் லூயில் ஃபீகோ மற்றும் ரவுல், பிறேசிலின் றொபேட்டோ, கார்லோஸ் உலகத்தில் எந்த அணியிலும் றியல் மட்ரிட் கொண்டுள்ள அளவுக்கு **SUPER STARS** இருக்கமுடியாது. ஹொங்கொங்கிலிருந்து தாய்லாந்து சென்று, றியல் மட்ரிட் அணி அங்கு பயிற்சிகளில் ஈடுபடுவதற்காக பாங்கொக்கின் ராஜமங்களா ஸ்ரேடியத்துக்குப் போயிருந்தது. அவர்களின் பயிற்சியை அல்ல, அவர்களைப் பார்க்க அங்குகூடிய ரசிகர் வெள்ளம் முப்பதினாயிரம் பேர், நம்பமுடிகிறதா? ஒன்றை ஒப்புக்கொள்ளவேண்டும். சினிமா நடிக நடிகைகளுக்குக் கூடும் கூட்டத்தைவிட, தற்போது உதைபந்தாட்ட வீரர்களுக்குக் கூடும் கூட்டம் மிக அதிகரித்துவிட்டது. சினிமாவைப் பொறுத்து, அவர்களின் செல்வாக்கு ஒரு வரையறைக்குட்பட்டது. ஆனால், உதைபந்தாட்ட வீரர்களின் செல்வாக்கு சர்வதேசப் பரம்பல் கொண்டது. முப்பத்தேழு மணித்தியாலங்கள் மட்டுமே ரியல் மட்ரிட் அணி தாய்லாந்தில் தங்கப் போகிறது. அவர்களின் பாதுகாப்புக் கருதி கடமைபுரியப் போகின்றவர்கள் ஆயிரத்து இருநூறு பொலிஸார். அது ஒருபுறமிருக்க இந்த ஆசியச் சுற்றுப்போட்டியில் நிறையக் கற்றுக் கொண்டோம் என்கிறார் றொபேட்டோ கார்லோஸ். சிறப்பாக ஐரோப்பிய விளையாட்டு முறைக்கும், ஆசிய விளையாட்டு முறைக்கும் நிறைய வேறுபாடுண்டு. அந்த நுட்பங்களை நாங்கள் கற்றுக்கொண்டோம் என்கிறார். கற்றது கைமண்ணளவு என்கிறாரோ றொபேட்டோ கால்லோஸ்.

இன்னொருபுறம் - சீனா, ஜப்பான், ஹொங்கொங் நாடுகளில் றியல் மட்ரிட் ஆடிய நான்கு ஆட்டங்களுக்கும் சேர்ந்த மொத்த இரசிகர்கள் ஒரு லட்சம் பேர். ஆனால், இதில் அவதானிக்க வேண்டியது, இந்த ஒரு லட்சம் பேரும் உதைபந்தாட்ட இரசிகர்கள் தானா என்பது. இல்லை என்ற கருத்துப் பலமாக ஒலிக்கிறது. இதில் பாதிப் பேராவது றியல் மட்ரிட் அணியில் இடம்பெற்றுள்ள நட்சத்திரங்களைக் காணத்தான் கூடியிருந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

அதிலும் சிறப்பாக இங்கிலாந்து அணியின் தலைவரும் மிகுந்த கவர்ச்சி கொண்டவருமான டேவிட் பெக்கத்தைப் பார்க்கவே கூடினார்கள் என்பது உண்மையாக உள்ளது. இந்தவகையில் நோக்கும்போது, உதைபந்தாட்ட ஆர்வத்துக்கும் அப்பால் பெக்கம் காய்ச்சல் சர்வதேச ரீதியாக வேகமாகப் பரவியிருப்பதை அவதானிக்கக் முடிகிறது.

**- ரோஜா**

# உன்னால் முடியும்



சுசந்திகா - ஓடத்தயார்

பாரிஸில் ஆரம்பமாகவிருக்கும் உலகத்தடகளச் சாம்பியன்சிப் போட்டிகளில் இலங்கையைப் பொறுத்து ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படுவது மகளிர் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டப்பந்தயங்களாகும். ஏனெனில் இவை இரண்டும் சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் (200 மீற்றர்) வெண்கலம் வென்ற சுசந்திகா ஜயசிங்க கலந்து கொள்ளப்போகும் போட்டிகளாகும். இவர், பாரிஸ் போட்டிகள் கடுமையானவையாகவே இருக்கும் என்பதை ஒப்புக்கொண்டாலும், தான் விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்கிறார். கடுமையான பயிற்சிகளைத் தொடர்ந்து தான் செய்து வருவதாகக்கூறும் இவர், அண்மைக்காலத்தில் முன்னணி வீராங்கனைகளுடன் போட்டியிடும் சந்தர்ப்பம் தனக்குக்கிடைக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். மேலும் பாரிஸ் உலக சாம்பியன்சிப் போட்டிகள் வேடிக்கையானவையல்ல, என்றும் அதன் கனதிபற்றிக் குறிப்பிடுகின்றார்.

மரியன் ஜோன்ஸ் களத்தில் இல்லை என்பது 100, 200 மீற்றர் போட்டிகளில் பங்குகொள்ளும் வீராங்கனைகளுக்கு ஒரு ஆறுதல்தான். ஆனால், அதுவே அவர்களைப் பதற்றம் மிகுந்தவர்களாகவும் மாற்றிவிடுகிறது. ஏனெனில் பரிபூரணமாக தங்கம் தமக்கே என்ற ஒவ்வொருவரும் உறுதிப்படுத்திக் கொள்ளும் வேளையில் அது தவறிவிடுமோ என்ற அச்சமும், கூடவே சேர்ந்து விடுகின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன் எட்மன்டன் போட்டிகளில் மரியன் ஜோன்சைத் தோற்கடித்தவர் சண்ணா புளொக் (100 மீற்றர்). இவர் பாரிசில் 100 மீற்றர், 200 மீற்றர் தங்கப்பதக்கம் இரண்டும் தனக்கே என்று நம்புகிறார். இவர் 1997 உலக சாம்பியன்சிப் போட்டிகளில் (ஏதென்ஸ்) சண்ணா புளொக் தங்கம் வெல்ல, சுசந்திகா வெள்ளிப் பதக்கம் வென்றவர். இன்னொரு குறுந்தூர வீராங்கனை பஹாமாஸ் தீவுகளைச் சேர்ந்த சன்ட்ரா ஸ்ரப். இவர்கள் வரிசையில் அமெரிக்காவின் இன்னொரு வீராங்கனையான கெல்லிவைற் சரியான நேரத்தில் உயர்ந்த தகைமையுடன் முன்னணியில் நிற்கின்றார். இவர்களையெல்லாம் சுசந்திகா சந்தித்தே ஆகவேண்டும். இந்த யதார்த்த நிலைமைகளை நன்கு புரிந்துகொண்டுள்ள சுசந்திகா மிதமாகவே பேசுகின்றார். எனினும் இவரது முயற்சி, ஆர்வம், திறமை எல்லாம் ஒன்று சேரும்போது, 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் குறுந்தூரப் போட்டிகளில் இவர் ஏதாவது ஒரு பதக்கம் பெறுவார் என்பதை இலகுவில் மறுத்துவிட முடியாது.

**- நிமலா**

# தளராமல் வலை பின்னிய சிலந்தி

மூன்றாவது- இங்கிலாந்து தென்னாபிரிக்க டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெல்லும் என்று, யாருமே நினைத்திருக்கமாட்டார்கள். வெற்றி இலக்கான 201 என்பது, தென்னாபிரிக்காவிற்கான ஒரு இலக்கேயல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், தெரியாத விடயம் ஒன்று இருந்தது. அதுதான் ஜேம்ஸ் கோர்ட்லி எனும் விடாமுயற்சியுடைய வேகப்பந்து வீச்சாளர். இங்கிலாந்து அணிக்காக முதன் முதலாக விளையாடுகிறார் என்பது. இவருக்கு எடுத்த எடுப்பிலேயே பதினொரு வீரர்களுள் ஒருவராகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. முதல் நான்கு டெஸ்ட் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பன்னிரண்டு வீரர்களுள் கோர்ட்லியும் ஒருவராக இருந்தார். ஆனால் டெஸ்ட் ஆட்டம் தொடங்கும் நாள் காலையில் நீர் 'பன்னிரண்டாவது மனிதன்' என்று கூறப்பட்டும், அதனை அவர் மனச்சோர்வு இல்லாமல் ஏற்றுக்கொண்டார். ஆனால் ஐந்தாவது டெஸ்ட் போட்டியிலும், இதே பதிலை இவர் எதிர்பார்த்திருக்கக்கூடும். ஆனால், அந்த வியாழன் இவருக்கு ஏமாற்றம் அளிக்கவில்லை. டிரென்ட் பிரிஜ் டெஸ்டில் நீ விளையாடுகிறாய் என்றபோது ஒரு நாள் இது நடக்கும் என்று எதிர்பார்த்தேன் என்றார். இவரது தாய் தன் மகனிடம் தொடர்ந்து ஏமாற்றமாக இருக்கிறதே என்று கேட்டபோது, பன்னிரண்டு பேரில் ஒருவராக வராவிட்டால் பதினொன்றுக்குள் ஒருவராக வரமுடியாதல்லவா என்று கூறியிருக்கிறார். எனவே தனது முதலாவது டெஸ்ட் போட்டி இங்கிலாந்துக்கு மகத்தான வெற்றிதரும் வகையில் 28 வயதான கோர்ட்லி திடசங்கற்பம் செய்திருப்பார் போலத் தெரிகின்றது. ஆறு விக்கெட்டுக்களை முப்பதிரண்டு ஓட்டங்களுக்குச் சரிக்க டெஸ்ட்தொடர் 2 - 1 என்பது நிசசயம் என்றிருந்த தென்னாபிரிக்கா மண்கௌவியது. இவர் மொத்தம் 8 விக்கெட்டுக்கள் பெற்று ஆட்ட நாயகனவும் ஆனார்.

இன்னும் இரண்டு டெஸ்ட் மீதம் இருக்க தற்போது விளையாடிய மூன்று டெஸ்ட்களில் 1-1 என்று சமன் செய்து, மிகுந்த தன்னம்பிக்கையுடன் அடுத்த டெஸ்ட் போட்டிகளை எதிர்கொள்ளப்போகிற இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல் வோன் கருத்துக் கூறுகையில்- இவரது ஊக்கம், விடாமுயற்சி என்பன ஒவ்வொரு இளம் வீரனும் பின்பற்ற வேண்டிய பண்புகள் என்று கூறியுள்ளார்.

ஏன், கிரேம் ஸ்மித் தனது தோல்விக்கப்பாலும் தங்களைத் தலைகீழாகக் கவிழ்த்த சேர்ட்லியை மனதாரப் பாராட்டியுள்ளார். எமது மண்ணில் கூட வசதி வாய்ப்புக்கள் குறைவு. ஆதரவு குறைவு என்ற வகையில் மிகத் திறமையான் பல்வேறு துறை விளையாட்டுக் வீரர்கள் மனம் தளர்ந்து போவதும், சோர்வடைந்து விளையாட்டுத்துறையை விட்டு விலகுவதையும் அறிந்திருக்கின்றோம். ஆனால் கோர்ட்லியின் குணாதிசயம் எல்லோருக்கும் ஒரு தன்னம்பிக்கையைக் கொடுக்குமாயின் அது மிகுந்த மகிழ்ச்சியானதாக இருக்கும்.



கோர்ட்லி - ஜெனி - மனைவி நிட்சயம் பெருமிதமடையலாம்

**- மக்டலின் மரியா**

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்*
*இழைத்திருந்து எண்ணிக் கொளல்.*

திருக்குறள்.

# நமது நோக்கு

## துயரில்லா வாழ்வு எப்போது?

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, பதினேழு மாதங்கள் கடந்துவிட்டபோதும் - குடாநாட்டில் இயல்புநிலை இன்னமும் முழுமையாக உருவாகிவிடவில்லை.

இயல்புநிலை தோற்றுவிக்கப்படுவது புரிந்துணர்வு உடன்பாட்டில் முக்கிய அம்சமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றபோதும், இயல்புநிலை தோற்றுவிக்கப்படுவதில் அரசாங் கம் போதிய ஆர்வத்தைக் காட்டவில்லை என்று, பொது அமைப்புக்கள் நீண்ட நாட்களாகவே குற்றஞ் சாட்டிவருகின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் மீண்டும் ஒருமுறை பட்டியலிடப்பட்டு, நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வந்த நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் பட்டியலிட்ட எல்லா விடயங்களும் - பொதுமக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களை பாதிக்கின்ற மிகமுக்கிய காரணங்களாகும்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கின்ற இராஜதந்திர பிரதிநிதிகளிடம் - தமது வாழ்வுநிலை மீளவும் வழமை நிலைக்கு திரும்பவேண்டும் என்ற அவாவில் யாழ்ப்பாண மக்கள் கோரிக்கைகளை முன்வைத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆனால், மக்கள் மீளக்குடியேறுவதற்கு அனுமதிக்க வேண்டிய அரசிற்கு, போதிய இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகிக்கப்படுகின்றதா என்றால், அது பூச்சியமாகவே இருக்கிறது.

இதேவேளை - முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளின்போது, யாழ்ப்பாண மக்களில் சர்வதேச சமூகம் மிகவும் கரிசனை கொள்கின்றது என்ற நம்பிக்கையை ஊட்டும் வகையிலான அவர்களின் பயணங்கள் மட்டும் மேற்கொள்ளப்படுகிறது.

நடைமுறையிலோ - மக்கள் போரின் துயர வடுக்களை சுமந்தவர்களாக, தமது சொந்த வீடுகளிற்கு திரும்ப முடியாதவர்களாக, வருவாயை ஈட்டும் தொழில் முயற்சிகளை முன்னெடுக்க முடியாதவர்களாக இன்னமும் வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்கள் பொருளாதார ரீதியாகவும், சமூக - பண்பாட்டு ரீதியாகவும் நலிவுற்றவர்களாக வாழ்ந்துவருகின்ற துயரம் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இந்த நிலை மாற்றப்பட்டு, அவர்களை மீளவும் சமுக வாழ்வோடு இணைக்கக்கூடிய எந்த சாத்தியக்கூறுகளையும் காணக்கூடியதாக இல்லை.

ஏனென்றால், இயல்புநிலை திரும்ப வேண்டுமாயின் இந்த மக்களின் வாழ்நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும். தமது சொந்த வீடுகளுக்கு திரும்பவேண்டும். ஆனால், இவை யாவும் மனிதாபிமான ரீதியில் சிந்திக்கப்படாமல், இராணுவ நோக்கு நிலையிலேயே பார்க்கப்படுகிறது.

இன்னமும் - மக்கள் எங்கெங்கு குடியேற முடியாது என்ற அறிவித்தல்கள் வெளிவருகின்றதே தவிர, எங்கு குடியேறலாம் என்ற அறிவித்தல்கள் வெளிவருவதாக இல்லை.

பதிலாக, இன்னமும் மக்களின் இயல்புநிலையை பாதிக்கக்கூடியவாறு, மக்கள் செறிந்துவாழும் பிரதேசங்களில் படையினர் புதிய முகாம்களை அமைக்கும் முயற்சிகளிலே தான் ஈடுபடுகின்றனர்.

இந்த வகையில்தான், வடமராட்சி - பொற்பதி கிராமத்தில் படையினர் முகாம் அமைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்ற செயலும் நோக்கப்படுகிறது.

இவ்வாறு - எல்லாவகையிலும் அதிருப்தியுற்ற மக்கள் பிரதிநிதிகள் - நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் சமர்ப்பித்துள்ள மகஜரில், தமது இயல்புநிலை தோன்றுவதற்கு இடையூறாக இருக்கின்ற காரணிகளை இனங்காட்டியுள்ளனர்.

இந்த மகஜரை சரியான வகையில் புரிந்துகொண்டு, ஆக்கபூர்வமான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும். இதன்மூலமே, மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை சர்வதேச சமூகம் சரியான முறையில் புரிந்துகொண்டுள்ளது எனக் கொள்ளலாம்.

இதனூடாக - மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு முயற்சிகளில் ஏற்படுத்தவேண்டிய மாற்றங்களையும் மக்களின் விருப்பினையும் சரிசெய்து கொள்ளலாம்.

ஆகவே, மக்களின் மீள்குடியேற்றத்திற்கு என ஒதுக்கப்படும் நிதியின் மூலமாகப் பெறப்படும் விளைவு திருப்திகரமாக இருக்கும். இதனூடாக மாற்றம் எதுவுமின்றி அவலவாழ்வை வாழ்ந்துவரும் மக்களின் வாழ்க்கையிலும் ஒரு நம்பிக்கையை ஊட்டக்கூடியதாக இருக்கும்.

துரித அபிவிருத்தி, துரிதபுனர்வாழ்வு என்பவற்றைக் காண - மக்களின் பங்களிப்புக்கு மதிப்பளிக்கவேண்டும். அப்போதுதான் உண்மையான இயல்புவாழ்வை மக்கள் அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

உண்மையான எந்த விளைவை பெறவேண்டும் என விரும்புகிறார்களோ, அந்த உண்மையான சுமுக இயல்பு நிலையுடன் கூடிய மக்களுக்கான வாழ்வை ஏற்படுத்த முடியும்.

மாறாக இந்த மக்களின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்படுமானால், மீளவும் துயரம் நிறைந்த அவலவாழ்வே மக்களுக்கு பரிசாகக் கிடைக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

# சிறுவர்களின் அபிவிருத்திக்காக அனைவரும் பணியாற்ற வேண்டும்!

## முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களும், தாம் ஒரு முழுமையான தொண்டு நிறுவனம், எனும் நோக்கோடு பணியாற்றவேண்டுமென, முன்னாள் மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். நாவலர் வித்தியாசாலையில் நேற்று நடைபெற்ற சிறுவர் அபிவிருத்திக்கான நிறுவனத்தில் உதவி வழங்கும் நிகழ்வு ஒன்றில் கருத்துரை வழங்கும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மண்ணிலே பல இடர்களுக்கு மத்தியிலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எமது தமிழ்த் தேசிய இனத்தின் சொத்துக்களாகிய சிறுவர்களது அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அனைவரும் பணியாற்ற முன்வரவேண்டும்.

சிறுவர்களது கல்விசார்துறைகளை மையமாக வைத்து, ஏதோ ஒருவகையில் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் தனது பணியை ஆற்றி வருகின்றமை பாராட்டத்தக்கது.

எம்மைப் பொறுத்தவரையிலே, இந்த மண்ணினுடைய தேவைகள் அதற்குப் பொறுப்பானவர்களால் இன்னும் சரியாக மதிப்பிடப்படவில்லை. தேவைகள் உள்ள மக்களுக்கு, தேவைகள் சேரவேண்டிய இடங்களுக்கு, எமது சேவைகள் சென்றடைவது போதாதுள்ளது. இந்த எண்ணம் இன்று எல்லோர் மத்தியிலும் உள்ளது.

சிறுவர்களை மையமாக வைத்து, தத்துவார்த்த ரீதியாக சிறுவர்களுடைய உரிமைகள் பற்றிப் பேசப்படுகின்றதே தவிர, இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, பசி நிரம்பிய வயிற்றோடு தமது கல்வியைத் தொடரமுடியாத நிலையிலும், வதிவிட வசதிகள் இல்லாத நிலையிலுமுள்ள சிறுவர்களை, இந்த சமூகம் சரியாக இனங்கண்டு உதவவில்லை.

இங்கு தெளிவாக நான் ஒரு கருத்தை முன்வைக்கின்றேன். எங்களிடம்கூட எமது சமூகத்தில் அடிமட்டம்வரை சென்று, பணியாற்றக்கூடிய வசதி வாய்ப்பு போதாதுள்ளது. இப்பொழுது நாங்கள் செய்யும் அநேகமான சேவைகள்கூட, வெளிநாட்டு உதவியோடு தான் செய்யப்படுகின்றது. ஆனாலும், இது போதாது எனும் நிலையே உள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் குறிப்பாக தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள சிறுவர்கள் அதிகம் பாதிப்படைந்துள்ளார்கள். அவர்களிடம் யாரும் செல்வதில்லை. அவர்களின் தேவைகளை அறிந்து கொள்வதுமில்லை.

அந்த மக்களின் உண்மையான உணர்வுகளை, நாம் தெளிவாகத் தெரிந்து கொண்டவர்களாக செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் - அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்விச் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## செவ்வாய் கிரகம் பூமியின் கிழக்கு திசையில் தோன்றும்!

செவ்வாய்க் கிரகத்தை தொலைநோக்கிக் கண்ணாடி போன்ற எந்தவித உபகரணமுமின்றிப் பார்க்கக்கூடிய ஒரு சந்தர்ப்பம் அடுத்த வாரம் கிடைக்கவிருக்கிறது.

60 ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை இந்தச் சந்தர்ப்பம் ஏற்படுவது வழக்கமாகும்.

27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணியளவில்-கிழக்குத் திசையில் - செவ்வாய்க்கிரகம் தோன்றும் எனவும், அடுத்தநாள் அதிகாலை ஒரு மணியளவில் மேற்குத் திசையில் அது அஸ்தமனமாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

செந்தணல் போல் அது காட்சியளிக்கும். கண்கள் மூலம் செவ்வாய்க் கிரகத்தை பார்க்கும்போது, 5 கோடி 50 இலட்சம் கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் அது இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## உயர்தரப் பரீட்சையில் புதிய ஆறு பாடங்கள்!

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு 6 புதிய பாடங்கள் அறிமுகம் செய்யப்படவிருக்கின்றன.

தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் ஜே.வி.குணவர்த்தன, தகவல் தருகையில், மின்கலங்கள், கணிதக் கலங்கள், தொழில்நுட்பம் என்ற பிரிவின் கீழ் இந்த ஆறு பாடங்களும் கொண்டுவரப்படும்.

இந்தப் பாடங்களில் ஒன்றைக் கட்டாயமாகப் பயில்வது அவசியமாகும். முப்பத்தைந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் முன்னோடித் திட்டம் என்ற அடிப்படையில் இது மேற்கொள்ளப்படும்.

# வடக்கு - கிழக்கு மாகாணசபை தேர்தல் நடத்துவது குறித்து அரசு ஆலோசனை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்காக, உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் அலுக் அலுவிகார ஆராய்ந்துவருகிறார்.

இதற்காக, மாகாணசபைத் தேர்தல் சட்ட மூலத்தில் திருத்தம் கொண்டு வருவதற்காக, அமைச்சரவையின் அனுமதி பெற உத்தேசித்திருப்பதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்காக, தேர்தல் ஆணையாளரின் சட்ட ஆலோசனையும் பெற்றிருப்பதாக, உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்துவதென்றால், தேர்தல் சட்டத்தை திருத்த வேண்டுமென - சட்டமா அதிபரினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால், தேர்தல் சட்டமூலத்திலும், உள்ளூராட்சி மாகாணசபைத் தேர்தல் சட்டமூலத்திலும் திருத்தம் கொண்டு வருமாறு, உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சருக்கு தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கின்றார்.

## பஸ் சேவை சீரின்மையால் போக்குவரத்துக்கள் பாதிப்பு!

பருத்தித்துறை டிப்போவினால், சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 765 ஆம் இலக்க பஸ் அடிக்கடி பழுதடைவதால், இந்த பஸ்ஸில் பயணம் செய்யும் பயணிகள், சிலவேளைகளில் பல மைல்தூரம் நடந்து செல்லவேண்டியநிலை ஏற்படுகின்றது.

நுணாவில், சரசாலை ஊடாகப் பருத்தித்துறையிலிருந்து-சாவகச்சேரிக்கு வேறு பஸ்கள் சேவையில் ஈடுபடாததால், இந்தப் பகுதி - அரச ஊழியர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இந்த பஸ் சேவையையே நம்பியுள்ளனர். குறிப்பிட்ட பாதைவழியாக, பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் - பழைய பஸ்ஸையே சேவையில் ஈடுபடுத்துவதால், இந்த பஸ் அடிக்கடி வழியில் பழுதடைந்து வருவதாகவும் - இதனால், பயணிகள் பல மைல் தூரத்திற்கு நடந்துசெல்ல வேண்டியுள்ளது.

பஸ்சேவையில் ஈடுபடும் வீதி, அண்மையில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் திருத்தப்பட்டுள்ளதால், புதிய பஸ் ஒன்றினை சேவையில் ஈடுபடுத்துமாறு, பயணிகள் கேட்டுள்ளனர்.

## தபால் பொதிகள் வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது!

தபால் மூலம் அனுப்பப்படும் பொதிகள், யாழ்ப்பாணத்தை வந்தடைவதில் சிறு தடங்கல்கள் ஏற்பட்டுள்ளது. இதனால், ஒரு சில தபால் பொதிகள், வவுனியாவில் தேங்கிக் கிடப்பதாக தபால் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேரடியாகத் தரைவழிப்பாதை மூலமாக கொண்டுவரப்பட முடியாத சில பொருட்களை, தபால்பொதிகள் மூலமாக அனுப்புவதாகத் தெரியவந்துள்ளது. இதன் மூலமாக - சட்ட விரோதமான பொருட்களும், ஆபாசப்படப் பிரதிகளும் அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனாலேயே, விடுதலைப் புலிகள் தபால் பொதிகளை தரைவழிப்பாதை மூலம் கொண்டுவருவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும், இது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருதாகவும், மிக விரைவில் இதற்கு ஒரு தீர்வு காணப்படுமெனவும், யாழ்.பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - விமானம் மூலம் அனுப்பப்படும் தபால் பொதிகள் தாமதமாக வந்து சேர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிகிச்சையளிக்காத வைத்தியருக்கு எதிராக இறந்த குழந்தையின் சடலத்துடன் ஆஸ்பத்திரிக்கு முன் ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

எந்தவித சிகிச்சைகளுமின்றி மரணமாகிய குழந்தையின் சடலத்தை, பிரதேப் பெட்டியில் வைத்து - கதிர்காமம் ஆஸ்பத்திரிக்கு முன்னால், குழந்தையின் உறவினர் மற்றும் பிரதேச வாசிகளும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

"பைத்தியக்கார டி.எம்.ஒவை மாற்றுங்கள்', 'சாராயம் குடித்து அரசாங்க வேலைபார்க்கும் வைத்தியரை மாற்றுங்கள்' 'குழந்தையை மரணிக்கப்பண்ணிய டொக்டரை விசாரணை செய்யுங்கள்' என்று அட்டைகளைத் தாங்கியவாறு, ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 18 ஆம் திகதி பாம்பு கடித்து, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஏ.ஏ.மடுசங்க என்ற குழந்தை - இரண்டு மணித்தியாலங்கள் எந்தவித சிகிச்சையும் அளிக்கப்படாததால் தான் இறந்தது என்று, உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆர்ப்பாட்ட பேரணியில் 1200 இக்கும் மேற்பட்டோர் பங்கு பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் 2003

## மீளளிப்பு நடைமுறைகள்.

1.கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகைதந்து கடனை மீளப்பெற வேண்டும்.
2.ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும்.
3.கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டு வரவேண்டும்
* இறப்புச் சான்றிதழ்
* இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)
* கடன் சான்றிதழ்
* பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
* பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்

4.கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.
5.அ)மீளளிப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.
ஆ)அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங்.2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரசாங்க அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

*நேற்றைய தொடர்ச்சி*

### பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு


| | |
|---|---|
| 41.)யா/பரு/1508 | திருமதி. தவமணி சண்முகநாதன் |
| 42.)யா/பரு/1521 | திரு. வீரகத்தி கணபதிப்பிள்ளை |
| 43.)யா/பரு/1606 | திரு. இராஜரட்ணம் தருமபாலா |
| 44.)யா/பரு/1609 | திருமதி. காங்கேஸ்வரி தனபாலசிங்கம் |
| 45.)யா/பரு/1622 | திருமதி. வத்சலா ரங்கநாதன் |
| 46.)யா/பரு/1634 | திருமதி. மணிமேகலை இராமச்சந்திரன் |
| 47.)யா/பரு/1649 | திருமதி. பரமேஸ்வரி சபாநாதன் |
| 48.)யா/பரு/1657 | திருமதி. திரேஸ்நவமணி இருதயராசா |
| 49.)யா/பரு/1664 | திருமதி. மேரி மெக்டலீன் அரியநாயகம |
| 50.)யா/பரு/1758 | திரு. சுப்பையா நந்தகுமார் |
| 51.)யா/பரு/1852 | திருமதி. மகமாசிஅம்மா பாலசுப்பிரமணியம் |
| 52.)யா/பரு/1909 | திரு. வைத்திலிங்கம் ஆனந்தலிங்கம் |
| 53.)யா/பரு/1929 | திருமதி. ஜெயதேவி கண்ணப்பசாமி |
| 54.)யா/பரு/2074 | திருமதி. சுந்தரம்மாள் திருநாவுக்கரசு |
| 55.)யா/பரு/2079 | திருமதி. குணஈஸ்வரி பிறேமச்சந்திரன |
| 56.)யா/பரு/2137 | திரு. கணபதிப்பிள்ளை பீதாம்பரம் |
| 57.)யா/பரு/2198 | செல்வி. பவானி இராசரட்ணம் |
| 58.)யா/பரு/2222 | திருமதி. செல்வத்திரவியம் சின்னராசா |
| 59.)யா/பரு/2267 | திருமதி. திரேசம்மா யேசுதாசன் |
| 60.)யா/பரு/2349 | திரு. நடராசா துரைச்சாமி |
| 61.)யா/பரு/2387 | திருமதி. சிவகாமியம்மா உலகநாதன் |
| 62.)யா/பரு/2435 | திரு. மூத்ததம்பி ஏரம்பு |
| 63.)யா/பரு/2489 | திரு. கனகசுந்தரம் சிதம்பரநாதன் |
| 64.)யா/பரு/2541 | திரு. சிவசுப்பிரமணியஐயர் மாதவராசா |
| 65.)யா/பரு/2568 | திரு. கதிரேசு இராசையா |
| 66.)யா/பரு/2592 | செல்வி. கௌரி பெரியதம்பி |
| 67.)யா/பரு/2655 | திரு. வேலுப்பிள்ளை கார்த்திகேசு |
| 68.)யா/பரு/2657 | திரு. செல்லத்தம்பி அருச்சுனா |
| 69.)யா/பரு/2774 | திரு. பொன்னையா செல்வகிருஷ்ணன் |
| 70.)யா/பரு/2782 | திரு. இராசா கார்த்திகேசு |
| 71.)யா/பரு/2785 | திரு. சுப்பிரமணியம் சுந்தரராசன் |
| 72.)யா/பரு/2814 | திரு. கந்தையா நடராசா |
| 73.)யா/பரு/2863 | திரு. பொன்னையா மாணிக்கம் |
| 74.)யா/பரு/2868 | திருமதி. மேரி அமிர்தம்மா பக்கஸ் |
| 75.)யா/பரு/2878 | திருமதி. தெய்வானை சந்திரசேகரம் |
| 76.)யா/பரு/2955 | திருமதி. பூரணம் முருகுப்பிள்ளை |
| 77.)யா/பரு/3095 | திருமதி. விசாகலக்ஷ்மி அம்மா பரமயோகராஜசிங்கம் |
| 78.)யா/பரு/3104 | திரு. ஞானப்பிரகாசம் ஜோசேப்பு |
| 79.)யா/பரு/3111 | திரு. வேலுப்பிள்ளை நடராசா |
| 80.)யா/பரு/3112 | திருமதி. றெஜினா யோகநாதன் |
| 81.)யா/பரு/3122 | திரு. வயிரமுத்து சிவலிங்கம் |
| 82.)யா/பரு/3194 | திரு. செல்லத்துரை விக்னேஸ்வரன் |
| 83.)யா/பரு/3196 | செல்வி. யேட்றூட்ஜெயசீலி மனுவேற்பிள்ளை |
| 84.)யா/பரு/3279 | திருமதி. சுசீலாதேவி நிரஞ்சன் |
| 85.)யா/பரு/3300 | திரு. நடராசா நாகேந்திரராசா |
| 86.)யா/பரு/3330 | திரு. நாகேந்திரஐயர் சுப்பிரமணியக்குருக்கள் |
| 87.)யா/பரு/3343 | திரு. முருகுப்பிள்ளை பொன்னம்பலம் |
| 88.)யா/ப்ரு/3377 | திருமதி. மீனாட்சி சங்கரன் |
| 89.)யா/பரு/3429 | திருமதி. ஜெயலக்சுமி செல்வரவீந்திரகுமார் |
| 90.)யா/பரு/3462 | செல்வி. கிருபாஞ்சனா ஈசுரபாதம் |
| 91.)யா/பரு/3610 | திரு. வல்லிபுரம் ரவிதாஸன் |
| 92.)யா/பரு/3618 | திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை |
| 93.)யா/பரு/3745 | திருமதி. நாகரத்தினேஸ்வரி பரமானந்தம் |
| 94.)யா/பரு/3770 | திரு. கந்தையா திருஞானம் |
| 95.)யா/பரு/3779 | திரு. சித்திரவடிவேலு சிவானந்தராசா |
| 96.)யா/பரு/3784 | திரு. சண்முகராஜா சிவகுமார் |
| 97.)யா/பரு/3826 | திரு. ஆனந்தசாமி நாராயணசாமி |
| 98.)யா/பரு/3874 | திருமதி. தில்லைநாயகி பாலகிருஸ்ணன் |
| 99.)யா/பரு/3898 | திருமதி. சிவானந்தவல்லி பூரணச்சந்திரன் |
| 100.)யா/பரு/3905 | திருமதி. தில்லைராணி சண்முகநாதர் |
| 101.)யா/பரு/3939 | திரு. வல்லிபுரம் கந்தையா |
| 102.)யா/பரு/4035 | திருமதி. இராசம்மா யேசுதாசன் |
| 103.)யா/பரு/4081 | திரு. கந்தையா நல்லசிவம் |
| 104.)யா/பரு/4086 | திருமதி. ஜெனற் ஜெயக்குமாரி திபூசியஸ் |
| 105.)யா/பரு/4131 | திரு. பொன்னம்பலம் நவரத்தினராசா |
| 106.)யா/பரு/4250 | திருமதி. தங்கம் வல்லிபுரம் |
| 107.)யா/பரு/4276 | திரு. சின்னத்தம்பி பிள்ளையன் |
| 108.)யா/பரு/4299 | திரு. தம்பையா மாணிக்கவாசகம் |
| 109.)யா/பரு/4324 | திருமதி. மாதரசி பாலசுந்தரம் |
| 110.)யா/பரு/4333 | திருமதி. கமலவதி சிவசுப்பிரமணியம் |
| 111.)யா/பரு/4334 | செல்வி. ஞானசக்தி இராமநாதன் |

### சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 01.)யா/சா/22 | திரு. சுப்பையா மகேந்திரன் |
| 02.)யா/சா/88 | திருமதி. மங்கையர்கரசி துரைராஜா |
| 03.)யா/சா/166 | திரு. அப்பாபிள்ளை சுப்பிரமணியம் |
| 04.)யா/சா/259 | செல்வி. பிரமீளா குணரத்தினம் |
| 05.)யா/சா/296 | திரு. அம்பலவாணர் வேலாயுதம் |
| 06.)யா/சா/389 | திரு. கார்த்திகேசு செல்லத்துரை |
| 07.)யா/சா/429 | திரு. குமாரசாமி சுப்பிரமணியம் |
| 08.)யா/சா/432 | திரு. நட்சத்திரம் பெனடிக்ற் |
| 09.)யா/சா/490 | திரு. சின்னப்பா பொன்னுத்துரை |
| 10.)யா/சா/522 | திரு. தம்பையா சிவப்பிரகாசம் |
| 11.)யா/சா/544 | திருமதி. வனிதகலா சுந்தரலிங்கம் |
| 12.)யா/சா/609 | திரு. சிதம்பரப்பிள்ளை விஜயரத்தினம் |
| 13.)யா/சா/647 | திரு. அரியகுட்டி வன்னியசிங்கம் |
| 14.)யா/சா/683 | திரு. சதாசிவம் கனகரத்தினம் |
| 15.)யா/சா/784 | திரு. பொன்னையா கந்தையா |
| 16.)யா/சா/806 | திருமதி. தங்கம்மா மாணிக்கம் |
| 17.)யா/சா/863 | திரு. அருணாசலம் சிவஞானம் |
| 18.)யா/சா/874 | திரு. கனகசபை சிவகுருநாதன் |
| 19.)யா/சா/884 | திருமதி. இரஞ்சிதமலர் ஞானசேகரம் |
| 20.)யா/சா/893 | திரு. நவரத்தினம் ஆனந்தராசா |
| 21.)யா/சா/906 | திருமதி. பகவதியம்மா சங்கரலிங்கம் |
| 22.)யா/சா/951 | திருமதி. மனோன்மணி நவரத்தினம் |
| 23.)யா/சா/1026 | திரு. நவரத்தினம் திருநீலகண்டன் |
| 24.)யா/சா/1033 | திரு. மாணிக்கம் ஞானசேகரம் |
| 25.)யா/சா/1072 | திருமதி. குஞ்சு தேவராசா |
| 26.)யா/சா/1088 | திரு. வல்லிபுரம் தேவராசா |
| 27.)யா/சா/1099 | திரு. சபாபதி சுப்பிரமணியம் |
| 28.)யா/சா/1157 | செல்வி. நிரோஜினி நடேசபிள்ளை |
| 29.)யா/சா/1167 | திருமதி. கனகம்மா பஞ்சாட்சரம் |
| 30.)யா/சா/1181 | திருமதி. நாகராணி ஞானசேகரம் |
| 31.)யா/சா/1182 | திரு. சபாரத்தினக்குருக்கள் இராமச்சந்திரஐயர் |
| 32.)யா/சா/1193 | திரு. பாலகிருஸ்ணன் வயிரவநாதன |
| 33.)யா/சா/1214 | திரு. நடராசா பிரபாகரன் |
| 34.)யா/சா/1243 | திரு. கணபதிப்பிள்ளை அருணாசலம் |
| 35.)யா/சா/1250 | திரு. செவ்வந்திநாதஐயர் பரமானந்தக்குருக்கள் |
| 36.)யா/சா/1388 | திருமதி. தவமணிதேவி நடேசபிள்ளை |
| 37.)யா/சா/1399 | திரு. கந்தையா ஆறுமுகம் |
| 38.)யா/சா/1405 | திரு. கந்தையா சின்னராசா |
| 39.)யா/சா/1426 | திரு. அன்னதேவன் ஆனந்ததேவன் |
| 40.)யா/சா/1532 | திரு. நடராசா விக்கினேஸ்வரன் |
| 41.)யா/சா/1740 | திருமதி. கோமளேஸ்வரி கங்காதரன் |
| 42.)யா/சா/1769 | திரு. பொன்னுத்துரை திருநாவுக்கரசு |
| 43.)யா/சா/1792 | திரு. சின்னத்தம்பி வீரகத்தி |
| 44.)யா/சா/1878 | திரு. கந்தையா சுப்பிரமணியம் |
| 45.)யா/சா/1928 | திருமதி. சிவசோதி அற்புதநாதன் |
| 46.)யா/சா/1973 | திருமதி. இந்திராணி கனகசபை |
| 47.)யா/சா/2043 | திரு. தாமோதரம்பிள்ளை கனகசிங்கம் |
| 48.)யா/சா/2071 | திரு. சின்னத்துரை கார்த்திகேசு |
| 49.)யா/சா/2097 | திருமதி. தனலட்சுமி பாலச்சந்திரன் |
| 50.)யா/சா/2162 | திருமதி. ஜோதிமலர் செல்லத்துரை |
| 51.)யா/சா/2203 | திருமதி. இரத்தினவதி செல்லத்துரை |
| 52.)யா/சா/2250 | திரு. வீரகத்தி கந்தையா |
| 53.)யா/சா/2269 | திரு. சபாரத்தினம் நடராசா |
| 54.)யா/சா/2344 | திரு. சின்னக்குட்டி திருநாவுக்கரசு |
| 55.)யா/சா/2374 | திருமதி. நிர்மலாதேவி கிருஸ்ணகுமார் |
| 56.)யா/சா/2398 | திருமதி. நந்தினி சிவபாலன் |
| 57.)யா/சா/2404 | திருமதி. புஸ்பராசம் செல்லத்தம்பி |
| 58.)யா/சா/2409 | திருமதி. மங்களேஸ்வரி தர்மரட்ணம் |
| 59.)யா/சா/2432 | திரு. இராசையா ஜெகதீஸ்வரன் |
| 60.)யா/சா/2439 | திரு. வைத்திலிங்கம் இராசரத்தினம் |
| 61.)யா/சா/2484 | திரு. நவரத்தினம் கஜேந்திரன் |
| 62.)யா/சா/2506 | திரு. வல்லிபுரம் சின்னையா |
| 63.)யா/சா/2522 | திரு. முத்தையா திசநாயகம் |
| 64.)யா/சா/2626 | திரு. வல்லிபுரம் நவரத்தினம் |
| 65.)யா/சா/2658 | திரு. தாமோதரம்பிள்ளை மகேஸ்வரன் |
| 66.)யா/சா/2678 | திருமதி. கலாநிதி நாகேந்திரன் |
| 67.)யா/சா/2744 | திருமதி. மகேஸ்வரி கந்தசாமி |
| 68.)யா/சா/2859 | திரு. கந்தையா தங்கவேலு |
| 69.)யா/சா/2880 | திரு. வேலு சின்னத்தம்பி |
| 70.)யா/சா/2883 | செல்வி. பத்மாவதி தர்மகுலசிங்கம் |
| 71.)யா/சா/2889 | திரு. சின்னையா முருகர் |
| 72.)யா/சா/3000 | திருமதி. லிங்கேஸ்வரி பரமநாதன் |
| 73.)யா/சா/3011 | திருமதி. தவராணி செல்வராசா |
| 74.)யா/சா/3017 | திரு. சரவணமுத்து கந்தையா |
| 75.)யா/சா/3025 | திருமதி. இராசம்மா கோவிந்தசாமி |
| 76.)யா/சா/3037 | செல்வி. நந்தினி சுப்பிரமணியம் |
| 77.)யா/சா/3113 | திரு. சிதம்பரப்பிள்ளை சச்சிதானந்தன் |
| 78.)யா/சா/3125 | திரு. சதாசிவம் ஜெயசிங்கம் |
| 79.)யா/சா/3148 | திரு. ஏகாம்பரநாதன் பரஞ்சோதி |
| 80.)யா/சா/3157 | திரு. செல்லையா நடராசா |
| 81.)யா/சா/3220 | திருமதி. நாகம்மா தர்மரட்ணம் |
| 82.)யா/சா/3244 | திருமதி. சறோஜா செல்வராஜா |
| 83.)யா/சா/3292 | திரு. ஐயாத்துரை தங்கராசா |
| 84.)யா/சா/3346 | திருமதி. சிவக்கொழுந்து சண்முகானந்தன் |
| 85.)யா/சா/3348 | திருமதி. தவமணி ஈஸ்வரதாஸ் |
| 86.)யா/சா/3362 | செல்வி. இராசாம்பாள் ஆறுமுகம் |
| 87.)யா/சா/3405 | திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம் |
| 88.)யா/சா/3412 | திரு. தில்லை சின்னத்தம்பி |
| 89.)யா/சா/3416 | திருமதி. பரமேஸ்வரி கதிர்காமர் |
| 90.)யா/சா/3433 | திரு. வயிரவன் அருணாசலம் |
| 91.)யா/சா/3460 | திருமதி. தெய்வானைப்பிள்ளை நல்லையா |
| 92.)யா/சா/3497 | திரு. விசுவலிங்கம் யோகேஸ்வரன் |
| 93.)யா/சா/3558 | திருமதி. கமலாம்பிகை குலசிங்கம் |
| 94.)யா/சா/3570 | திரு. அருணாசலம். சின்னையா |
| 95.)யா/சா/3575 | திரு. வல்லிபுரம் அருளானந்தம் |
| 96.)யா/சா/3608 | திருமதி. தங்கம்மா கணபதிப்பிள்ளை |
| 97.)யா/சா/3673 | திரு. சின்னத்தம்பி மயில்வாகனம் |
| 98.)யா/சா/3758 | திரு. கந்தையா தம்பிராசா |
| 99.)யா/சா/3797 | திரு. முத்துக்குமாரு அருளானந்தம் |
| 100.)யா/சா/3803 | திரு. பேரம்பலம் நடராசா |
| 101.)யா/சா/3835 | திரு. சோமசுந்தரம் வைத்திலிங்கம் |
| 102.)யா/சா/3841 | திரு. சுப்பையா யோகராசா |
| 103.)யா/சா/3896 | செல்வி. சிவசாந்தினி அமிர்தலிங்கம் |
| 104.)யா/சா/3984 | திரு. வேலுப்பிள்ளை செல்லத்துரை |
| 105.)யா/சா/4000 | திரு. முருகர் பொன்னையா |
| 106.)யா/சா/4029 | திரு. வல்லி கனகன் |
| 107.)யா/சா/4088 | திரு. வயிரன் லோகநாதன் |
| 108.)யா/சா/4105 | திரு. பொன்னையா சிற்றம்பலம் |
| 109.)யா/சா/4129 | திரு. முருகேசு ஈசுரபாதம் |
| 110.)யா/சா/4135 | திரு. தம்பு வேலுப்பிள்ளை |
| 111.)யா/சா/4200 | திரு. வீரகத்தி சிற்றம்பலம் |
| 112.)யா/சா/4210 | திரு. பொன்னையா பரமேஸ்வரன் |
| 113.)யா/சா/4254 | திரு. முருகேசு சுப்பிரமணியம் |
| 114.)யா/சா/4320 | திரு. வேலாயுதம் யோகராசா |
| 115.)யா/சா/4415 | திரு. வேலுப்பிள்ளை தில்லைநாதன் |
| 116.)யா/சா/4508 | திருமதி. தவமணி கார்த்திகேசு |
| 117.)யா/சா/4563 | திரு. செல்லத்துரை துரைசிங்கம் |
| 118.)யா/சா/4586 | திரு. சின்னத்தம்பி சுந்தரலிங்கம் |
| 119.)யா/சா/4591 | திருமதி. சீதேவிப்பிள்ளை சிவக்கொழுந்து |
| 120.)யா/சா/4649 | திரு. கார்த்திகேசு முருகேசு |
| 121.)யா/சா/4755 | திருமதி. உருக்குமணி சிவராசா |
| 122.)யா/சா/4767 | திருமதி. இராசேஸ்வரி ஜெயறூபன் |
| 123.)யா/சா/4795 | திருமதி. கலாநிதி ஸ்ரீகாந்தன் |
| 124.)யா/சா/4824 | செல்வி. இந்திரா ஆசைப்பிள்ளை |
| 125.)யா/சா/4829 | திரு. கந்தையா சுவாமிநாதன் |
| 126.)யா/சா/4837 | திரு. சூசைப்பிள்ளை அருள்ரூபன் |
| 127.)யா/சா/4892 | திரு. கணபதிப்பிள்ளை சரவணமுத்து |
| 128.)யா/சா/4919 | திரு. நல்லையா கனகரத்தினம் |
| 129.)யா/சா/4929 | திருமதி. மகாலட்சுமிதேவி வரதராசா |
| 130.)யா/சா/5013 | திருமதி. தெய்வானைப்பிள்ளை கந்தையா |
| 131.)யா/சா/5014 | திரு. முருகன் சின்னத்தம்பி |
| 132.)யா/சா/5022 | திரு. சின்னவன் கந்தன் |
| 133.)யா/சா/5034 | திரு. நீக்கிலாப்பிள்ளை யோசேப்பு |
| 134.)யா/சா/5089 | திரு. கோவிந்தன் கந்தர் |
| 135.)யா/சா/5115 | திரு. கந்தையா மகேந்திரராஜா |
| 136.)யா/சா/5176 | திரு. முருகுப்பிள்ளை குலசிங்கம் |
| 137.)யா/சா/5207 | திருமதி. தேவமனோகரி கதிர்காமநாதன் |
| 138.)யா/சா/5264 | திரு. வேலுப்பிள்ளை செல்லையா |
| 139.)யா/சா/5280 | திரு. செபஸ்தியாம்பிள்ளை மரியானந்தராஜா |
| 140.)யா/சா/5294 | திரு. கதிரவேற்பிள்ளை மகாலிங்கம் |
| 141.)யா/சா/5325 | திரு. வல்லிபுரம் நல்லையா |
| 142.)யா/சா/5329 | திருமதி. இலட்சுமிப்பிள்ளை பொன்னையா |
| 143.)யா/சா/5346 | திருமதி. துஸ்யந்தி யோகராசா |
| 144.)யா/சா/5368 | திரு. சங்கரப்பிள்ளை அருணாசலம் |
| 145.)யா/சா/5451 | திரு. தர்மலிங்கம் சிறீதரன் |
| 146.)யா/சா/5605 | திரு. புஸ்பராணி சிவபாதசுந்தரம் |
| 147.)யா/சா/5616 | திரு. முருகன் நாகன் |
| 148.)யா/சா/5629 | திரு. மயில்வாகனம் அமிர்தலிங்கம் |
| 149.)யா/சா/5636 | திரு. வேலன் கிட்டினன் |
| 150.)யா/சா/5639 | திரு. குருநாதி கதிரவேலன் |
| 151.)யா/சா/5807 | திரு. அண்ணாமலை இரத்தினசிங்கம் |
| 152.)யா/சா/5824 | திரு. முருகன் கந்தசாமி |
| 153.)யா/சா/5911 | திரு. கணபதி சுப்பிரமணியம் |
| 154.)யா/சா/5970 | திரு. சிதம்பரம் குமாரசாமி |
| 155.)யா/சா/6015 | திருமதி. சந்திரராணி மகேந்திரன் |
| 156.)யா/சா/6039 | திரு. சிவகுரு குலராசசிங்கம் |
| 157.)யா/சா/6054 | திருமதி. சிவலோகநாயகி நவபாலன் |
| 158.)யா/சா/6100 | திரு. விநாயகமூர்த்தி கந்தசாமி |
| 159.)யா/சா/6144 | திரு. கனகசபை லோகநாதன் |
| 160.)யா/சா/6167 | திரு. சங்கரப்பிள்ளை தேவகாந்தன் |
| 161.)யா/சா/6265 | திரு. செல்லப்பா செல்வராஜா |
| 162.)யா/சா/6297 | திருமதி. தனலட்சுமி சிறீகாந்தா |
| 163.)யா/சா/6301 | திரு. செல்லையா அருளம்பலம் |
| 164.)யா/சா/6322 | திரு. காசிப்பிள்ளை நடராசா |
| 165.)யா/சா/6408 | திரு. வட்டன் செல்வராசா |
| 166.)யா/சா/6462 | திரு. சுப்பையா கிட்ணன் |
| 167.)யா/சா/6509 | திருமதி. மேரி மாக்கிறேட் பாக்கியநாதன் |
| 168.)யா/சா/6601 | திரு. சுப்பையா கயிலாயபிள்ளை |
| 169.)யா/சா/6628 | திரு. சபாரத்தினம் திருலோகசிங்கம் |
| 170.)யா/சா/6702 | திரு. முருகப்பா நடராசசுந்தரம் |
| 171.)யா/சா/6716 | திரு. தளையசிங்கம் அகத்தியர் |
| 172.)யா/சா/6725 | திரு. தம்பு சபாரத்தினம் |
| 173.)யா/சா/6734 | திரு. இளையதம்பி ஜெகசோதி |
| 174.)யா/சா/6742 | திரு. இளையதம்பி செகராசா |
| 175.)யா/சா/6773 | திரு. சின்னத்தம்பி நவரத்தினம் |
| 176.)யா/சா/6783 | திரு. பரமசாமிஐயர் சண்முகநாதன் |
| 177.)யா/சா/6794 | திரு. கந்தையா அமிர்தலிங்கம் |
| 178.)யா/சா/6831 | திருமதி. செல்லம்மா செல்லையா |
| 179.)யா/சா/6913 | திரு. சின்னையா சேனாதிராசா |
| 180.)யா/சா/6948 | திருமதி. தங்கமுத்து யோகராசா |
| 181.)யா/சா/6949 | திரு. சின்னத்தம்பி சண்முகம் |
| 182.)யா/சா/6959 | திரு. கந்தன் கணபதி |
| 183.)யா/சா/6972 | திரு. தர்மலிங்கம் தங்கராசா |
| 184.)யா/சா/6982 | திரு. சிவசம்பு சண்முகநாதன் |
| 185.)யா/சா/7027 | திரு. கந்தையா அன்ரன் இராசசிங்கம் |
| 186.)யா/சா/7485 | திரு. முருகன் நாகேந்திரம் |
| 187.)யா/சா/9953 | திரு. பொன்னுத்துரை கனகசபாபதி |

(மிகுதி 09 இல் பார்க்க...)

## பிரேசில் விண்வெளி நிலையத்தில்
# றொக்கட் வெடித்ததில் 19 ஊழியர்கள் பலி!



(லண்டன்)

பிறேசிலில் நடைபெற்ற றொக்கட் வெடிப்புச் சம்பவமொன்றில் 19 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிறேசிலில் உள்ள அல்கன்ரறா என்ற விண்வெளித்தளத்திலிருந்து விண்வெளிக்குச் செலுத்தப்படவிருந்த இந்த றொக்கட்டின், ஆயத்தப் பணிகள் நடைபெறும் முன்னரே, அதன் ஏவுதளத்தின் அடிப்பகுதியில் எஞ்சின் தவறுதலாகப் தீப்பிடித்துக்கொண்டதால் இந்த விபத்து நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விண்வெளியில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தக் கனவு கண்ட பிறேசில் - முதல் இரண்டுமுறை பின்னடைவைச் சந்தித்தபோதும், இம்முறை வெற்றிகரமாகச் செலுத்துவதற்கு முயன்றிருந்தது. இருந்தும், இந்த முயற்சியில் மூன்றாவது முறை பின்னடைவு ஏற்பட்டுவிட்டதாக பிரேசிலைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த றொக்கட் வெடிப்பினால் ஏற்பட்ட புகை மண்டலம் அத்திலாந்திக் சமுத்திரத்தையே மறைத்திருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

65 அடி உயரம் கொண்ட இந்த றொக்கட், இரண்டு செயற்கைக் கோள்களை அடுத்தவாரம் விண்ணில் செலுத்தவிருந்தது.

இதன் பணிகளில் 800 ஊழியர்கள் பணிபுரிந்ததாகவும், 6.5 மில்லியென் அமெரிக்க டொலர் செலவானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## செச்சின்யா பகுதியில்
# கார் குண்டுத் தாக்குதலில் 9 ரஷ்ய வீரர்கள் மரணம்!

(செச்சின்யா)

செச்சின்யாவின் மாகாணத் தலைநகரில் கார் குண்டு வெடித்து ரஷ்ய இராணுவத்தின் 9 வீரர்கள் இறந்தனர். கடந்த வியாழக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

செச்சின்யா தனி நாடாக வேண்டும் என்று போராடி வரும் அப்பகுதி மக்கள். ரஷ்ய அரசுக்கு எதிராக பயங்கரவாதச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். எனவே அவர்களை ஒடுக்க ரஷ்ய இராணுவம் அங்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.

அபு வாலித் என்ற அரபு நாட்டவர் தலைமையிலான பயங்கரவாதக் குழு இராணுவத்திற்கும் பொலிஸாருக்கும் சொந்தமான தகவல்கள் தொடர்புக் கேந்திரங்களையும் காவல் சாவடிகளையும் குறிவைத்துத் தாக்கி வருகிறது.

செச்சின்யத் தலைநகரில் இராணுவக் காவல் சாவடிக்கு அருகில் ஒரு கார் வந்து நின்ற சில விநாடிகளில், ஒரு இராணுவ லொரி அதைக் கடந்து செல்ல முற்பட்ட போது - லொரியுடன் கார் மோதி பெருத்த ஓசையுடன் கார் வெடித்துச் சிதறியது.

இந்தச் சம்பவத்தில் லொரியில் இருந்த ரஷ்ய இராணுவ வீரர்களில் 9 பேர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஹமாஸ் இயக்கத்தின் சொத்துக்களை முடக்குவதாக அமெரிக்கா அறிவிப்பு!

பலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் இயக்கத்தினதும், அவர்களுக்கு உதவுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வேறு 5 அமைப்புக்களதும் சொத்துக்களையும் நிதி மூலங்களை அமெரிக்காவிலிருந்து வெளியே எடுக்க முடியாதபடி முடக்கியிருப்பதாக அமெரிக்க அதிபர் புஷ் அமெரிக்க திறைசேரிக்கு நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறார்.

இஸ்ரேலில் செவ்வாயன்று நிகழ்ந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் பின்னர் அவர் இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையில் ஏற்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை மதிக்காமையே இம் முடிவுக்குக் காரணம் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# கனடாவில் காட்டுத் தீ; 30,000 பேர் இடம்பெயர்வு!

(ரொரன்ரோ)

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா என்னும் இடத்தில் அமைந்த கொலானா என்ன பிரதேசத்தில் காட்டுத்தீ வேகமாகப் பரவி வருவதால் அங்கிருக்கும் 30,000 இற்கு மேற்பட்ட மக்களை வெளியேறுமாறு கனடா அரசால் கேட்கப்பட்டுள்ளது.

இந்தக் காட்டுத் தீயை அணைப்பதற்கு 3000 இற்கு மேற்பட்ட தீயணைப்புப் படையினர் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து ஈடுபட்டுள்ளதாகவும் அதை இன்றுவரை முற்றுமுழுதாக அணைக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மழையில்லாமல் மிகவும் கடுமையான வரட்சி நிலவியதாலேயே இந்தக் காட்டுத் தீ பரவியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பஸ்ராவில் நடந்த தாக்குதலில் மூன்று பிரிட்டிஷ் படையினர் பலி!

ஈராக்கின் தென்பகுதி நகரான பஸ்ராவில், பிரிட்டிஷ் படையினரின் வாகனம் மீது சதாம் ஆதரவுப் படைகள் மறைந்திருந்து தாக்கியதில் 3 பிரிட்டிஷ் படையினர் கொல்லப்பட்டும், ஒருவர் படுகாயங்களுக்குமுள்ளானதாகப் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் படையினர் பஸ்ரா நகரின் பிரதான பாதையூடாகப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது, வண்டி ஒன்றிற்குள் மறைந்திருந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தப்பட்ட பாதை, பிரிட்டிஷ் படைகளால் போக்குவரத்திற்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டதோடு, அங்கு பாரிய தேடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அண்மைக் காலமாக ஈராக்கில் சதாம் ஆதரவுப் படைகளின் தாக்குதல் தொடர்வதால், அமெரிக்க, பிரிட்டிஷ் படையினருக்கு ஏற்படும் மரணங்களை அவர்களின் உறவினர்களுக்கு அடிக்கடி அறிவிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் - அமெரிக்கப் பிரிட்டிஷ் படைகளுக்கு இது கஷ்டமான காலமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் இத்தகைய மறைந்திருந்து நடத்தப்படும்



தாக்குதல்களால் இதுவரை 10 பிரிட்டிஷ் படையினர் கொல்லப்பட்டதாகவும் -

எங்கு, எந்தநேரத்தில் தாக்குதல் நடைபெறும் என்று தெரியாத நிலையில் - பிரிட்டிஷ் படைகள் சிந்தித்துச் செயற்பட வேண்டிய கட்டத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் 2003

*பக்கம் 08 இன் தொடர்ச்சி*

### வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 01.)யா/வ.கி/32 | திருமதி. மேரிறெயினா செலஸ்ரின் |
| 02.)யா/வ.கி/63 | திரு. ஏரம்பு கணேசபிள்ளை |
| 03.)யா/வ.கி/112 | திருமதி. மதுரமணி வேதிலிங்கம் |
| 04.)யா/வ.கி/116 | திரு. அடைக்கலம் எலவுஸ்த்திரியார் |
| 05.)யா/வ.கி/172 | திருமதி. மரியஜேறூட்தீபம் அன்ரனிமரியராஜா |
| 06.)யா/வ.கி/221 | திரு. மரியாம்பிள்ளை றூபேட் மரியதாஸ் |
| 07.)யா/வ.கி/234 | திருமதி. மகேஸ்வரி பாலகுமாரசாமி |
| 08.)யா/வ.கி/246 | திரு. பவுலீனப்பு எஸ்தாக்கி |
| 09.)யா/வ.கி/265 | திரு. சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் |
| 10.)யா/வ.கி/395 | திரு. சண்முகம் கிருஸ்ணபிள்ளை |
| 11.)யா/வ.கி/428 | திரு. தேவசகாயம் பத்தலோமை |
| 12.)யா/வ.கி/481 | திரு. பொன்னம்பலம் தில்லைநடேசு |
| 13.)யா/வ.கி/509 | திருமதி. றீற்றாபற்றிமா அந்தோனிப்பிள்ளை |
| 14.)யா/வ.கி/563 | திரு. மரியான் யாக்கோப்பு |
| 15.)யா/வ.கி/623 | திரு. கார்த்திகேசு முருகேசு |
| 16.)யா/வ.கி/653 | திருமதி. ஆனந்தலட்சுமி தவசீலன் |
| 17.)யா/வ.கி/775 | திருமதி. அன்னமேரிபாக்கியம் ஜோஸ்ரின்அப்பு |
| 18.)யா/வ.கி/788 | திரு. நாகலிங்கம் அருமைத்துரை |
| 19.)யா/வ.கி/829 | திரு. இளையான் சதாசிவம் |
| 20.)யா/வ.கி/899 | திருமதி. சறோஜினி யோகரட்ணம் |

### முல்லைத்தீவு மாவட்டம்

| | |
|---|---|
| 01.)மு/42 | திரு. சின்னர் சின்னத்தம்பி |
| 02.)மு/83 | திருமதி. தவபாக்கியம் ஆனந்தராசா |
| 03.)மு/115 | திரு. முத்துத்தம்பி செல்வநாயகம் |
| 04.)மு/130 | திரு. சின்னக்குட்டி பொன்னம்பலம் |
| 05.)மு/137 | திரு. இராசையா செல்லத்துரை |
| 06.)மு/160 | திரு. செல்லையா தேவதாஸ் |
| 07.)மு/188 | திருமதி. சிவராணி பஞ்சாட்சரம் |
| 08.)மு/197 | திரு. கதிரவேலு சிவகுருநாதன் |
| 09.)மு/208 | திரு. கயிலாசபிள்ளை தம்பிராஜா |
| 10.)மு/297 | திருமதி. ஞானரஞ்சிதம் சிறில் |
| 11.)மு/306 | திரு. தங்கரத்தினம் தனராஜ் |
| 12.)மு/335 | திரு. கதிரவேலு பொன்னையா |
| 13.)மு/370 | திருமதி. கிருஸ்னாம்பாள் சுப்பிரமணியம் |
| 14.)மு/413 | திரு. பூபாலபிள்ளை பொன்னம்பலம் |
| 15.)மு/484 | திரு. சண்முகம் செல்வானந்தம் |
| 16.)மு/532 | திருமதி. நல்லம்மா கந்தையா |
| 17.)மு/536 | திருமதி. இராசமணி கனகலிங்கம் |
| 18.)மு/563 | திரு. நாகலிங்கம் தியாகராசா |
| 19.)மு/577 | திரு. அன்னராசா அழகராசா |
| 20.)மு/641 | திரு. கனகசபை சிங்கரத்தினம் |
| 21.)மு/704 | திருமதி. தேவிகாராணி பாலசிங்கம் |
| 22.)மு/715 | திருமதி. பத்மாவதி கந்தையா |
| 23.)மு/722 | திரு. பாலசுந்தரம் கிரிதரன் |
| 24.)மு/740 | திருமதி. நல்லம்மா கந்தையா |
| 25.)மு/767 | திரு. பொன்னம்பலம் செல்வக்குமாரசாமி |
| 26.)மு/804 | திரு. சிதம்பரப்பிள்ளை கதிர்காமு |
| 27.)மு/877 | திரு. தம்பு நல்லதம்பி |
| 28.)மு/892 | திரு. முகமதுஅலி முத்து அருள்ராசா |
| 29.)மு/900 | திரு. பொன்னம்பலம் பேரின்பநாயகம் |
| 30.)மு/1053 | திருமதி. பரமேஸ்வரி தனபாலசிங்கம் |
| 31.)மு/1065 | திருமதி. சறோயினிதேவி கந்தசாமி |
| 32.)மு/1097 | திரு. வெற்றிவேலு மயில்வாகனம் |
| 33.)மு/1145 | திரு. சின்னத்துரை சுந்தரலிங்கம் |
| 34.)மு/1173 | திருமதி. ஜெயறஞ்சினி ஜீவகுமார் |
| 35.)மு/1220 | திரு. தம்பையா பரமானந்தம் |
| 36.)மு/1335 | திரு. மாப்பாணர் தங்கராசா |
| 37.)மு/1346 | திருமதி. தெய்வேந்திரராணி மனோகரன் |
| 38.)மு/1444 | திரு. கூழயன் நடராசா |
| 39.)மு/1467 | திரு. கணபதிப்பிள்ளை இராமலிங்கம் |
| 40.)மு/1526 | திரு. மரியாம்பிள்ளை அன்ரனி ஜெயநாதன் |

### பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| 01.)கி/ப/59 | திரு. தில்லையம்பலம் சிவகுருநாதன் |
| 02.)கி/ப/72 | திரு. கந்தையா பொன்னையா |
| 03.)கி/ப/91 | திரு. இராசையா இராசேஸ்வரன் |
| 04.)கி/ப/172 | திருமதி. யோகமலர் லோகநாதன் |
| 05.)கி/ப/178 | திரு. பொன்னையா தனபாலசிங்கம் |
| 06.)கி/ப/183 | திருமதி. சிவபாக்கியம் வேலாயுதம் |
| 07.)கி/ப/196 | திருமதி. மனோன்மணி கந்தசாமி |
| 08.)கி/ப/209 | திரு. சின்னத்தம்பி ஜெயக்குமார் |
| 09.)கி/ப/237 | செல்வி. விஜயகுமாரி கன்கரட்னம் |
| 10.)கி/ப/296 | திருமதி. பூஞ்சோலை இராசேந்திரம் |
| 11.)கி/ப/313 | திருமதி. விமலாதேவி கணேசலிங்கம் |
| 12.)கி/ப/321 | திருமதி. யோகேஸ்வரி யோகானந்தம் |
| 13.)கி/ப/345 | திரு. துரையப்பா தம்பிமுத்து |
| 14.)கி/ப/448 | திருமதி. மாக்கிறேற் சிங்கராசா |
| 15.)கி/ப/477 | திருமதி. திருமுகராகினி ஞானசேகரம் |
| 16.)கி/ப/556 | திரு. வினாசித்தம்பி மகாலிங்கம் |
| 17.)கி/ப/605 | திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி |
| 18.)கி/ப/629 | செல்வி. சரஸ்வதி கந்தையா |

### வவுனியா மாவட்டம்

| | |
|---|---|
| 01.)வ/வ/93 | திரு. சம்புநாதன் சீவரத்தினம் |
| 02.)வ/வ/135 சின்னத்துரை | திரு. கணபதிப்பிள்ளை |
| 03.)வ/வ/143 | திருமதி. புஸ்பராணி ஞானசேகரம் |
| 04.)வ/வ/144 | திருமதி. சரஸ்வதி மாணிக்கவாசகர் |
| 05.)வ/வ/166 | திரு. கிருஸ்ணன் மாயகிருஷ்ணன் |
| 06.)வ/வ/192 | திரு. சிதம்பரப்பிள்ளை தணிகாசலம் |
| 07.)வ/வ/208 | திரு. தில்லையம்பலம் சேனாதிராசா |
| 08.)வ/வ/243 | திரு. கந்தையா காசிநாதர் |
| 09.)வ/வ/345 | திரு. பொன்னுத்துரை தெய்வேந்திரன் |
| 10.)வ/வ/363 | திரு. கந்தையா கந்தசாமி |
| 11.)வ/வ/390 | திரு. கதிரேசு தருமலிங்கம் |
| 12.)வ/வ/395 | திரு. கதிரவேலு வினாசித்தம்பி |
| 13.)வ/வ/398 | திரு. நமசிவாயம் மங்களேஸ்வரன் |
| 14.)வ/வ/404 | திரு. நல்லையா தர்மபாலன் |
| 15.)வ/வ/408 | திருமதி. இந்திராணி வேகாவனவேல் |
| 16.)வ/வ/445 | திரு. கனகசபை சிவசம்பு |
| 17.)வ/வ/547 | திரு. கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் |
| 18.)வ/வ/618 | திரு. சோனமுத்து பேரின்பசுகுமார் |
| 19.)வ/வ/639 | திருமதி. செல்லபாக்கியம் பிறைசூடி |
| 20.)வ/வ/680 | திரு. அந்திரேஸ் சின்னத்துரை |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருமலையில் பொலிஸார் தாக்குதல்; பன்னிரு பிறிமா ஊழியர்கள் படுகாயம்!

(திருகோணமலை)

திருமலை பிறிமா மா ஆலையின் முன் பொலிஸார் மேற்கொண்ட தடியடி, கண்ணீர்ப்புகைக்குண்டுப் பிரயோகத்தில் பன்னிரண்டு பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை ஏழு மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

திருகோணமலை பிறிமா மா ஆலையில் - நிரந்தரமில்லாத ஊழியரை நிரந்தரமாக்குமாறு, அங்கு நிரந்தரமாக கடமையாற்றும் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் நிர்வாகத்தைக் கோரியிருந்தார். இவரது கோரிக்கையை ஏற்காத நிர்வாகம் அவரை, நேற்றையதினம் கொழும்பிற்கு இடம்மாற்றியது. இதனைக் கேள்வியுற்ற நிரந்தரமற்ற ஊழியர்கள், நேற்றுக்காலை பிறிமா மா ஆலையின் பிரதான வாயிலின் முன் ஆர்ப்பாட்டம் செய்ததுடன், எவரையும் உட்செல்லவும் அனுமதிக்கவில்லை.

நிர்வாகத்தினர் பொலிஸாருக்குத் தெரிவிக்கவே, பொலிஸார் வந்து ஆர்ப்பாட்டக்காரரைக் கலைந்துசெல்லுமாறு கூறியபோதும், அவர்கள் செல்லாத காரணத்தால் அவர்கள்மீது தடியடி, கண்ணீர்ப்புகைக்குண்டுப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில், பன்னிரண்டு பேர் படுகாயமடைந்ததுடன் அவ்விடத்திலேயே இருவர் மயக்கமாகி விழுந்தனர்.

இதேவேளை - பிறிமா மா ஆலையில் நிரந்தரமாக பணிபுரியும் ஐம்பது வீதமானோர், நிரந்தரமில்லாத ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

(10,4)

பிரசன்னா
கணனிக் கல்வி நிலையம்
K.K.S. வீதி, சுன்னாகம்
எமது நிலையத்தில் குறைந்த கட்டணத்தில்
பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
- பல்கலைக்கழக ஆய்வுக்கட்டுரைகள்
- றோணியோ வேலைகள்
- Printing (Lazer, Dotmatic and Colour)
- Scanning
- CD Writing (Mp3, Audio, Video)
- News Paper Advertisment Designing
- Computer Sales & Repairing
Prashannaa CSC Graphics

# உழவு இயந்திரங்கள் மோதி மன்னாரில் ஒருவர் பலி!

(மன்னார்)

மன்னார் - கற்கடந்தகுளம் பகுதியில், இரண்டு உழவு இயந்திரங்கள் நேருக்குநேர் மோதிக்கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் நடைபெற்றது. ஒரு உழவு இயந்திரம் வெளிச்சம் இல்லாமல் வந்ததாலேயே இவ்விபத்து நடந்ததாகவும், இதனால் அதனை ஓட்டிவந்த சாரதி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றைய உழவு இயந்திரத்தின் சாரதியைக் கைதுசெய்த பொலிஸார், நேற்று மன்னார் மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் அநுராதபுரம் சிறைச்சாலையில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## விளையாட்டுவிழா!

அறவழிப் போராட்டக் குழுவின் ஆதரவில் இயங்கிவரும் மகாத்மா சனசமூக நிலையத்தின் மழலைகள் கல்விப் பூங்காவின் 28 ஆவது விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.00 மணிக்கு, நிலைய மைதானத்தில் நடைபெறும்.

பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வாமனா உதயகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் - சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியசீலன், சனசமூகத் தலைவர் ஞா.சின்னத்தம்பி, அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா உட்பட மேலும் பலர் கலந்துகொள்வர்.

# மக்கள் நலன்...

எடுக்கப்படும் முடிவுகளை, இலங்கை அரசு ஏற்றுக்கொண்டால் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்கலாம் என்றும்,

வடக்கு - கிழக்கில் வாழும் அனைத்து மக்களும் அனுபவிக்கக்கூடிய அதிகாரங்களை உள்ளடக்கிய ஒரு நிர்வாக அலகை, ஒரு வரைபை உருவாக்குவதுதான் - எங்கள் முக்கியநோக்கம் எனறும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் முன்வைத்த வரைபில் சில திருத்தங்கள் செய்யப்பட இருப்பதாகவும், மேலதிக அதிகாரங்கள் உள்ளடக்கப்படவேண்டியிருக்கிறது.

அரசாங்கம் முன்வைத்த வரைபைப் பரிசீலித்து, சகல விடயங்களையும் உள்ளடக்கிய முழுமையான அதிகாரக் கட்டமைப்பைக் கொண்டதான ஒரு நிர்வாகக் அலகிற்கான வரைபை, சமர்ப்பிக்கவிருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கலந்துரையாடல் ஆரம்பிப்பதற்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன்,

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த அடிப்படையிலேயே- பிரான்ஸின் தலைநகரில் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் குறித்து ஆராய்ந்து வருவதாக, அவர் கூறினார்.

இதேவேளை, இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தற்போது எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றிக் கருத்து எதனையும் அவர் தெரிவிக்கவில்லை.

# இராணுவத்தில் 215 பேரே இதுவரை இணைந்தனர்!

இராணுவத்துக்கு 4,000 பேரை இணைப்பதற்கான நேர்முகத்தேர்வுக்கு இரண்டு நாட்களில் 268 பேர் சமுகமளித்திருந்தபோதிலும், 215 பேரே தேர்ந்தெடுக்கப்பட்டதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்தார்.

கடந்த 18 ஆம், 19 ஆம் திகதிகளில் இடம்பெற்ற நேர்முகத்தேர்வில் இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

4,000 பேரை இராணுவத்தில் இணைப்பதற்கான நேர்முகப்பரீட்சை, அடுத்த மாதம் 19 ஆம் திகதிவரை இடம்பெறும் என்று பிரிகேடியர் சனத் கருணாரத்ன மேலும் தெரிவித்தார்.

## நெஞ்சம் மறவாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1944 - 07 - 27



மறைவு
2002 - 09 - 03

அமரர்
கிருஸ்ணபிள்ளை கணேசமூர்த்தி
ஓடி கணேஸ்
(வைரவர் கோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி)

அன்பான அப்பாவே!
நீங்கள் எமைப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனதுவே!
ஊர் மதிக்க வாழ்ந்து
உலகறியப் புகழ் நாட்டி
ஊரவர்க்கு உபகாரம் செய்து
ஊரில் உள்ள கொடிய துரோகிகள்
உங்கள் மேல் அடித்தது ஏனோ?
ஆண்டுகள் பல சென்றாலும்
இத்தரையில் உள்ளவர்களை
ஆண்டவன் வழிபார்த்து நிற்கின்றான்.

அப்பாவே! நீங்கள் கட்டிய மனையும்
அன்புக்கினிய மனைவியையும்
உங்கள் அன்புச் செல்வங்ளையும் — கண்டு
ஆண்டு ஒன்று ஆனதுவே!
நீங்கள் எங்கு சென்றீரோ
சென்ற இடம் சொல்வீரே அப்பா!
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயரம்
ஆற்றுவார் இன்றி வாடுகிறோம்
நாம் இங்கே!
ஓர் ஆறுதல் வார்த்தை
சொல்வீரே அப்பா!

இன்று (24.08.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு எமது இல்லத்தில் நினைவுகூரப்படுகிறது. இந்த நிகழ்வுகளில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
மனைவி, பிள்ளைகள்
(459)

# புலிகளின் திட்ட வரைபை...

நடுநிலையான நாடு, எக்காலத்திலும் காலனித்துவ நாடாக இருந்தில்லை. நோர்வேக்குச் சமாதான மத்தியஸ்த செயற்பாடுகளில் அனுபவமுண்டு. நோர்வே இலங்கையின் கடல்வளம் உட்பட அனைத்து வளங்களையும் சுரண்ட முனைவதாகச் சிலர் சொல்கின்றார்கள். இலங்கையின் அபிவிருத்தியில் இருபது வருடகாலப் பங்களிப்பு நோர்வேக்கு உண்டு. இருபது வருடகாலமாகப் போரிட்டவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர, நாம் அவர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டி வளர்த்தோம். பேச்சு ஆரம்பமாகியதும், எமது செயற்பாடு மாறியது.

புலிகளுக்கான போக்குவரத்து வசதி, பேச்சுக்கான தளங்களைத் தெரிவுசெய்வதில் ஈடுபடுகின்றோம். இருதரப்பும் எதைப்பேச விரும்புகின்றதோ, அதையே நிகழ்ச்சி நிரலில் சேர்க்க வேண்டும். நாம் எதையும் கூறமுடியாது. இருதரப்பும் விரும்பும்போது ஆலோசனையை வழங்குவோம். ஆறு சுற்றுப் பேச்சுக்கள் முடிவடைந்தும், தீர்மானங்கள் எதுவும் நிறைவேற்றப்படாததால், பேச்சுக்கள் ஸ்தம்பித்தது. தற்போது, பாரிஸில் இடம்பெறும் புலிகளின் உள்ளகப் பேச்சுவார்த்தை முடிவைப் பொறுத்தே பேச்சு ஆரம்பிக்கும். பேச்சுக்கள் ஆரம்பமாவதை அறுதியாகக் கூறமுடியாது. குரங்குப்பாஞ்சான் முகாம், மாற்றுக் கருத்துடைய அரசியல் எதிரிகள் இனந்தெரியாதோரால் கொல்லப்படுதல் போன்ற காரணங்களால், சிங்கள மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ளும்படி புலிகளுக்கு நோர்வே அழுத்தம் கொடுக்கவில்லையா? எனக்கேட்ட ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளித்த அவர் - நாம் ஆலோசனை, அறிவுரை வழங்குவோம் என்றார்.

பேச்சுக்கள் ஆரம்பித்தால், முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்வது பற்றி அரசும், புலிகளும்தான் தீர்மானிக்கவேண்டும். அதேபோல், பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதையும் அவர்களே தீர்மானிக்கவேண்டும்.

குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரம் - யுத்தநிறுத்த மீறல் என்பதை, கண்காணிப்புக்குழு திட்டவட்டமாகக் கூறிவிட்டது. முகாம் தொடர்பாகத் தொடரப்போகும் பிரச்சினைகளுக்கு எம்மால் எதுவும் செய்யமுடியாது. ஆயுதத்தைக் கொண்டு - அதிகாரத்தைப் பிரயோகிக்க எம்மால் முடியாது. முகாம் விடயம் நோர்வேயின் இயலாமையைக் காட்டுகின்றது.

கிழக்கில் இடம்பெறும் மனிதக் கொலைகள் - சமாதானத்திற்குப் பாதகமானவை. இதனால், கொழும்பும், சர்வதேசமும் கவலை கொண்டுள்ளன என்றார் பிராங்லான்ட். (111,09)

## சட்ட நிபுணர்.....

தற்போது விடுதலைப் புலிகளின் சட்டநிபுணர்கள் கலந்துகொண்டுள்ள இந்த மாநாடு, அந்த அமைப்பின் உள்ளக அந்தரங்க மாநாடு. இதில் எமது தரப்பில் எவரும் பங்குபற்றமாட்டார்கள்.

இவர்கள் கலந்துரையாடி இறுதி முடிவு எடுத்தபின்னர், விடுதலைப் புலிகளின் சட்டநிபுணர்களைப் பாரிஸில் சந்தித்துப் பேசுவர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## உடனடியாக.....

எத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டாவது, குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைத் தளபதிகளுக்கும் கண்டிப்பாக உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# திருகோணமலை....

அவர்கள் கோரும் இடைக்கால நிர்வாகசபையே, சமாதானப் பேச்சுத் தொடர ஒரேவழி.

சர்வதேச ஏகாபத்தியவாதிகளின் சதிவலையின் பின்னணியில் இயங்கி தமிழ்மக்களைக் கூறுபோடுவதன் மூலம், சமாதானத்தைக் குழப்புகின்ற சந்தர்ப்பவாத சக்திகளை கண்டித்தும்,

சமாதானச் சூழலைப் பயன்படுத்தி, தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்தைக் கண்டித்தும்,

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்கில் அரசினால் திட்டமிடப்பட்டுள்ள கிழக்கு மாகாண ஆட்சேர்ப்பைக் கண்டித்தும்,

தமிழ்மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கை பிரிக்கின்ற சந்திரிகா அம்மையாரின் சதி நடவடிக்கைகளைக் கண்டித்தும்,

படையினரால் தமிழ் மக்களுக்கு எதிராக மீண்டும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அட்டூழியங்களைக் கண்டித்தும், இந்த ஹர்த்தால் நடத்தப்படவுள்ளது.

எதுவித வன்முறையுமின்றி அமைதியான வழியில் எதிர்ப்பைக் காட்டுவதற்குச் சகல அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் என்பன தமது செயற்பாடுகளை நிறுத்தி இந்த ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவை வழங்க் வேண்டுமென, திருகோணமலை வாழ் பொங்குதமிழ் சமூகம் கேட்டுக்கொண்டுள்ளது.

10 ஏக்கர் தோட்டம் விற்பனைக்கு

இயக்கச்சியிலிருந்து ஒரு கிலோமீற்றர் முன்னாக பளையில் பிரதான வீதிக்கு (A 9) மிக அண்மையில் 20 மணித்தியாலங்கள் தொடர்ந்து இறைக்கக்கூடிய நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் 250 இற்கு மேற்பட்ட 20 வயதுடைய தென்னைமரங்கள் நிறைந்த பெரிய தோட்டம் என்னும் பெயருடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு :
திரு. சுந்தரலிங்கம்
அல்லது செல்லப்ப தியாகராசா
பிரதான வீதி,
பளை.
(சி-1378)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.